Registered No. M. 2330 'SIDDHANTHAM'

ACC-NO - 33772 Vol. 24—No. 6

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 24 | கர ஆனி 1951 ஜூன் | இதழ் 6

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

40, முத்தையா முதலி தெரு, வேளாளதேனுப்பேட்டை, சென்னை-6

மதிப்புரை

இலங்கைத் தமிழ் விழா மலர் : இலங்கையைப் பற்றிய பல அரிய கட்டுரைகளைக் கொண்டது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்பையும், ஈழநாட்டிலுள்ள இந்திய சிற்பத்தைப் பற்றியும், இந்தியா வந்த ஈழத் தமிழரைப் பற்றியும் விரிவாகக்கூறப்பட்டிருக்கிறது. இலங்கையில் தமிழ் எவ்வாறு பல மதத்தினராலும் வளர்க்கப்படுகிறதென்றும், ஈழநாடும் சைவமும் என்பதுப்பற்றியும் நல்ல கட்டுரைகள் இருக்கின்றன. பொதுவாக இலங்கை செல்ல விரும்பும் இந்தியருக்கு இந்நூல் பெரிதும் துணைசெய்யும். விலை ரூ. 5. தபாற் கூலி 50 சதம். கிடைக்குமிடம் : க. நவரத்தினம், சாந்திநிகேதன், பி.எ. தம்பிலேன், யாழ்ப்பாணம் (சிலோன்).

அற்புதத் தேவாரத் திரட்டு

திருஞானசம்பந்தர் 22 தலங்களிலும், திருநாவுக்கரசர் 8 தலங்களிலும், சுந்தரர் 18 தலங்களிலும் பாடிய தேவார திருப்பதிகங்களைக் கொண்டது இத்திரட்டு. இஃது தினப் பாராயணத்துக்கும் பிரார்த்தனைக்கும் இன்றியமையாதது தாகும். விலை 6 அணா. கிடைக்குமிடம் : கணபதிவாசக சாலை, 92, காமாட்சி கோயில் தெரு, காஞ்சிபுரம்.

சமாஜ கோடைவகுப்பு

இவ்வாண்டு சமாஜ கோடைவகுப்பு 16-5-1951 முதல் 28-5-1951 வரை கண்டனூர்க்கருகிலுள்ள வையக்கரையில் சிறப்பாக நடைபெற்றது. விவரம் அடுத்த இதழில் வரும்.

செய்திகள்

தூத்துக்குடி சைவ சித்தாந்தசபையின் 67-ம் ஆண்டு நிறைவு விழா 12, 13-5-1951-ல் ஈரோடு கல்வி நிலையம் ஆணையாளர் திரு S. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தூத்துக்குடி திரு. பாகம்பிரியாள் மாதர்கழக 23-ம் ஆண்டுவிழா 14-5-1951-ல் திருமதி ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருச்செங்கோடு, செங்கோட்டு வேலவர் கிருத்திகை உற்சவ சங்க எட்டாம் ஆண்டு நிறைவு விழா 21-5-51-ல்

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 24	கர ஆனி 1951 ஜூன்	இதழ் 6

ஈழத்துக் கீழ்க்கரை நாட்டுக் கோயில்கள்

(கோ. கி.)

1. வளமை: ஈழநாட்டில் கீழ்க்கரை மிகவும் வளமை பெற்ற பகுதியாகும். கரையோரம் முற்றும் தென்னை, பலா, மா முதலிய பலன் தரும் மரங்கள் மிகுதியும் உண்டு. அச்சோலைகளின் இடையே ஏரிகளும் கழிகளும் அமைந்திருக்கின்றன. அவைகளை யொட்டி நன்செய் வயல்களும் மிக உண்டு. ஆகவே இந்தக் கரையோரமாக மக்கட் பெருக்கத்திற்கு குறைவு இருக்குமா? எங்கு பார்த்தாலும் மக்கள் வாழும் ஊர்கள் காணப்படுகின்றன இவ்வூர்களில் தமிழும் சைவமும் மணக்கின்றன. அறிவு கமழ்கின்ற கல்விச்சாலைகளும் இருக்கின்றன. ஆசிரியர்கள் இளைஞர்களைத் தமிழிலும் சமயப்படிப்பிலும் ஆர்வம் கொள்ளச் செய்கிறார்கள். அவர்களுடைய நாட்டுப்பற்றை வியந்து போற்றவேண்டும். ஒரு கூட்டத்தில் ஒரு தமிழ் ஆசிரியர் தன் ஆர்வத்தை அடியிற் கண்ட கருத்துக்களால் பாராட்டி எடுத்துரைத்தார். "எங்கள் நாடு மிகப் புகழும் வளமையும் பெற்றது. அதனைப் பிறர் அறிவதில்லை. அத

ஞல் எங்களைப் புறக்கணிக்கிருர்கள். அவர்கள் எங்கள் நாட்டின் வளத்தையும் பண்பாட்டையும் அறிய வேண்டும். எங்கள் நாட்டில் நால்வகை நிலங்களும் உண்டு. கடற்கரையோரத்தில் அதோ நெய்தலைக்காண்கிறீர்கள். மருதநிலத்தை இதோ நன்செய் வயல்களில் காணுகிறீர்கள். எங்கள் மேட்டு நிலங்களில் முல்லையைப் பார்க்கிறீர்கள். எதிரே தொலைவில் தோன்றும் குன்றுகளில் குறிஞ்சியைக் காண்கிறீர்கள். நால்வகை நிலங்களும் இங்கே ஒருமித்து இருக்கச் செந்தமிழ் மணக்காமல்இருக்குமா? அதனேடு எங்கள் கழியில் நீந்தும் மீன்களும் பாடும் என்ருல் இயலோடு இசையும் இங்கு உள்ளது என்று கூறவேண்டாமா ? இது மட்டுமா, பண்டைய நாடகக் கலை எங்கள் பகுதியிலே தான் உண்டு. அதனை இன்றைக்கும் நாங்கள் போற்றி வருகிறேம்" என்று அந்தக் கீழ்க்கரை நாட்டின் அரிய வளத்தைப் பற்றிப் பேசினர். அதனை ஒட்டிப் பேசும் பெருமையும் எனக்கு வாய்த்தது. இந்த நாடு தமிழர் வாழும் ஈழத்துக் கீழ் நாடு ஆகும்.

2. சமய நிலையங்கள் : இந்தக் கீழ்க்கரை நாட்டில் செந்தமிழ் புரக்கப்படுவதோடு சமயமும் போற்றப்படுகிறது. சமய நிலையங்கள் நிரம்ப இருக்கின்றன. அவற்றில் நடுநாயகமாக போற்றப்படுவது **கோக்குடிக்கோயில்** என்பது. இது மட்டக்களப்பிலிருந்து காரைத்தீவிற்குச் செல்லும் பாதையில் ஓரிடத்திலிருந்து பிரிந்து மேற்கே கிளைச்சாலையில் சென்ருல் கழியைப் படகால் கடந்து எதிர்ப்புறம் சிறிது தொலைவு சென்றவுடன் காணப்படுகிற ஒரு அருமையான புகழ் பெற்ற கோயில் ஆகும். இக்கோயில் மிகத் தொன்மை வாய்ந்தது. அதன் ஐதீகமும் மன எழுச்சியைத் தரத்தக்கது. பண்டைக் காலத்தில் இக்கோயில் அமைந்த பகுதி அடர்ந்த வனந்திரமாக இருந்தது. அவ்

வனத்தில் ஒரு வேடன் விறகு வெட்டச் சென்றான். அங்கே ஓர் அழகிய கொக்குடிமரம் இருந்தது. (அது ஆலமரத்து இனத்தைச் சேர்ந்ததாம்.) அதனை அவ்வேடன் வெட்டினான். வெட்டின பிளவிலிருந்து குருதி பொழிந்ததாம். அதனைக்கண்ட வேடன் மயங்கி வீழ்ந்தானாம். பிறகு மயக்கம் தெளிந்து தன் ஊருக்குச் சென்று நடந்த அனுபவத்தைச் சொன்னானாம். ஊரார் வந்து பார்த்து அது ஒரு தெய்வத் தோற்றம் என்று உணர்ந்து அங்கே கோயில் எழுப்பி அதையே மூலத்தானமாக அமைத்து வணங்கி வருகிறார்களாம். இந்தப் பெருமை வாய்ந்தது இந்தக் கொக்குடி அண்ணலார் கோயில். இவ் வரலாற்றைக் கேட்டதும் என் வியப்பிற்களவில்லை. தென்தமிழ் நாட்டில் பாடல் பெற்ற கோயில்களில் கோகுடிக் கோயில் என்பதொன்று உண்டு. கொகுடி என்றால் ஒரு முல்லைக்கொடி என்று எண்ணினதுண்டு. இங்கே பாராட்டி வரும் ஐதீகத்தைக் கொண்டு கொகுடி என்பது ஒரு மரம் என்று கொள்ள இடம் இருக்கிறது அல்லவா? இந்த ஆலயம் அக்கம் பக்கத்து மக்கள் மிகுதியாகப் போற்றி வருபவைகளில் சிறந்தது என்று எண்ணவேண்டும்.

வடபால் நிலையம்: கீழ்க்கரையில் போற்றப்படும் ஆலயங்களில் வடக்கே உள்ளது சிற்றாண்டிக்குடி கந்தப் பெருமான் கோயில். இக்கோயில் யாழ்ப்பாணத்துக் கோயில்களைப் போல் கட்டப்பட்டது. பிராகாரம் ஓடுகளால் வேயப்பட்டது. ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு அழகிய உருவம் தீட்டப் பெற்றுள்ளது. அறுபத்து மூவர் வரலாறுகளும் அத்தூண்களில் ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுள்ளன. ஆலயத்தைச் சுற்றிலும் நிழல் தரத்தக்க தென்னம் பொழில் அடர்ந்த ஊர் உண்டு. இவ் வூரை அடைய இருப்புப்பாதையும் வண்டிப்பாதையும்

உண்டு. பொலன்னறுவை என்ற பண்டை ஊரிலிருந்து கிழக்கே சென்று வாழைச்சேனையண்டை தெற்கே திரும்பிச் சென்றால் அடுத்த நிலையம் சிற்றாண்டிகுடி ஆகும். இக்கோவில் திருவிழாக்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. கீழ்க்கரை நாட்டு மக்கள் மிகுதியாக இங்கே வழிபாடு செய்ய வருகிறார்கள்.

தென்பால் நிலயம்: மட்டக் களப்பை விட்டுத் தெற்கே கடற்கரையோரமாகச் சென்றால் அக்கடற்கரையின் மேல் மணல் தரையில் அருமையாக அமைந்துள்ளது திருக்கோயில் என்பது. இது அமைந்திருக்கும் நிலயம் தூய்மையான நெய்தல் நிலம் ஆகும். கோவில் தொன்மை வாய்ந்தது. முருகக் கடவுள் மயில்மீது எழுந்தருளி யிருக்கின்றார். அந்த உருவக் காட்சி மிக அருமையானது. தற்போது கோயில் பாலாலயமாக வைக்கப்பட்டுள்ளது. திருப்பணி தொடங்கி நிறுத்தப்பட்டுள்ளது. கூடிய விரைவில் மீண்டும் தொடங்கப் பெறக்கூடும். இடம் மிக அமைதியானது. மக்கள் தெய்வக்கொள்கை நிரம்பப் பெற்றவர்கள். இவ்வழி செல்லும் மக்கள் எல்லாம் இத்திருக்கோயிலைத் தரிசிக்காமல் செல்வதில்லை. வேறொரு அடைமொழியும் இல்லாமல் திருக்கோயில் என்ற தனித்தமிழ்ச் சொல்லால் குறிக்கப்படுவதே இந்தத் தலத்தின் பெருமையைக் காட்டுகின்றது.

ஏனையகோயில்கள்: இவைகளேயன்றி கீழ்க்கரை நாட்டில் அம்மன் கோயில்கள் பலவும் உண்டு என அறிய வேண்டும். அவைகளில் சிறப்பாகக் காண்பது கண்ணகியம்மன் கோயில். விபுலானந்த அடிகளின் பிறப்பு இடமாகிய காரைத்தீவில் பாதையை ஒட்டி ஒரு கண்ணகியம்மன் கோயில் இருக்கிறது. அதனையும் கண்டு வந்தேன். தமிழ்மக்கள் இருக்கும் இடங்கள் பலவற்றிலும் கண்ணகி

கோயில்கள் இருக்கின்றன. தென்தமிழ் நாட்டில் கண்ணகி என்ற பெயரால் கோயில்கள் இருக்கக் காணோம். ஆனால் ஈழநாட்டில் இன்றைக்கும் கண்ணகிக் கோயில்கள் இருந்தால் அம்மக்களின் பண்டைப் பெருமை எண்ணம் எத்துணை என்று கூறவும் வேண்டுமா? தொன்மையான முருகக் கடவுள் சன்னிதானமாகிய கதிர்காமத்திலும் ஒரு கண்ணகிக் கோயில் உண்டென்று அறியவேண்டும். இலங்கை அரசன் கயவாகு என்பான் 18 நூற்றாண்டுகளின் போது கண்ணகிச் சிலையை ஈழ நாட்டில் நாட்டினான். பிறகு அந்தத் தெய்வ வழிபாடு ஈழ நாடு முழுவதும் பாவிற்றுப் போலும். அதனால்தான் கீழ்க்கரை நாட்டிலும் கண்ணகிக் கோயில்கள் உள்ளன. இப்படிப்பட்ட நாட்டின் பண்பாட்டைத் தமிழ் மக்கள் உணரவேண்டாமா?

குமரகுருபரர்

ஆ. சிவகாமசுந்தரி அம்மாள்

[இராமநாதபுரத்தில் கூடிய சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம் 45-வது ஆண்டு நிறைவு விழாவின் சைவமங்கையர் மாநாட்டில் (31-12-50) ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அவர்கள் வரலாறு பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்]

சைவத் தமிழ்பெருப் மக்களே! தெய்வத் தாய்மார்களே!

உங்கள் அனைவர்க்கும் எனது உளமார்ந்த வணக்கத்தை முதற்கண் செலுத்திக்கொள்கிறேன். இம் மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பை அரிய பேற்றை எளியவளாகிய எனக்களித்த மாநாட்டு அமைப்பாளர் அத்தனை பேர்க்கும் எனது சித்தங் குளிர்ந்த நன்றி என்றும் உரிய

தாகும். இப்பேரவைக்கண் என்னைப் பேசுமாறு பணித்த பொருள் "குமாரகுருபரர்" என்பதாகும். தமிழ்ப் பெருங் கடவுளாம், தண்ணருள் முருகன் திருவருள் பெற்ற, தெய்வக் கவிஞராகிய குருபரரைப் பற்றிப் பேசுமாறு என்னைப் பணித்தது மிகப் பொருத்தமுடையது என்பதை அனைவரும் அறிவீர்கள். யான் அக்கவிஞர் பெருமான் அவதரித்த திருத்தலமாகிய ஸ்ரீவைகுண்டத்தில் பிறக்கும் பெரும் பேறு பெற்றவள் அன்றி இன்றும் அத்தலத்திலேயே வாழ்ந்து வரும் அரும்பேறுற்றவள். அதனாலேயே அத்தெய்வக் கவிஞரைப் பற்றிப் பேசும் பெரும் பேற்றையும் பெற்று நிற்கின்றேன். நான் அறிந்த குமாரகுருபரரை உங்கள் முன்பு சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டும் பொறுப்பு என்னைச் சார்ந்திருக்கிறது. "முயற்சி திருவினையாக்கும்" என்பது தெய்வப் புலவரின் திருவாக்கு முயல்வேன். பயன் எவ்வளவு நீங்கள் பெறுவீர்கள் என்பது தான் சொல்லமுடியாது. நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் உண்மைக் கவிஞர் ஒருவர் உலகில் உதிக்கிறார் என்று பெரியோர்கள் கருதுகிறார்கள். உண்மையில் அப்படித் தான் சிறந்த கவிஞர்கள் தோன்றுகிறார்கள். அந்த முறையில் முந்நூறு ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றியவர் குமரகுருபரர். அவருக்குமுன் தெய்வப் புலவர் திருவள்ளுவர் முதலாகச் சிவஞான முனிவர் ஈறாக எத்தனையோ வித்தகத் தெய்வப்புலவர்கள் விளங்கியுள்ளார்கள். அறம் அழிந்து மறம் தோன்றிப் பெருகும் காலத்தில், இறைவனே அம்மறத்தையொழித்து மீண்டும் அறத்தை நிலை நாட்ட அருட் பெரியார்களைத் தோற்றுவிக்கிறான். தெய்வப் புனித சமயமாய் சைவம் கெட்டுச் சமணம் தலையெடுத்து மறம் பெருகத் துவங்கியதும் சமண் கெடுக்கும் சம்பந்தப் பெருமானை, பரசமய கோளரியாம் பாலறாவாயரை நம் இறை

வன் தந்தருளினன் என்ற வரலாறு நாமனைவரும் அறிந்ததே. அதே முறையில்தான் பதினேழாம் நூற்றாண்டில் பரதேசத்தார் ஆங்கிலேயர், இத்தாலியர் போன்றவர்கள் நம்நாட்டுள் புகுந்து, தம் மதமாம் கிறித்தவத்தைப் பரப்பத் தலைபட்டனர். நம் நாட்டு மக்களைத் தம் வயப்படுத்த எத்தனையோ அருஞ் செயல்களைப் புரிந்தனர். தம்மை மெய்ஞ் ஞானிகளென எண்ணித் தருக்கொடு, நம்மையெல்லாம் அஞ்ஞானிகளே என்றழைத்து உபதேசம் செய்தனர். இங்ஙனம் கிறித்தவ சமயத்திற்கு நம் நாட்டில் வித்தூன்றிய நாளில்தான் அதை வேரோடு களைந்தெறிய வேண்டுமென இறைவன் அருளால் தோன்றினர் நம் குமரகுருபரர். அந்நாளில் இத்தாலிய நாட்டினின்று, நம் தமிழ் நாட்டுக்கு கிறிஸ்தவமதத்தைப் பரப்ப முனைந்த பேஸ்கிப் பாதிரியார் என்னும் வீரமாமுனிவர், நம் கவிஞர் பெருமானேடு சமய வாதம் புரிந்து தோல்வியுற்று அவரிடம் மாணவரானர் என்பர். பதினேழாம் நூற்றாண்டு பரசமய கோளரியாய்த் தமிழ் நாட்டில் அதுவும் சிறப்பு வாய்ந்த தென் பாண்டி நாட்டில் திருவவதாரம் செய்தருளிய தெய்வக் கவிஞரின் வரலாறு வியப்பினை யளிப்பதாகும். ஸ்ரீவைகுண்டத்தில் (சைவர் இதனை கயிலாயபுரம் என்பர்) சைவவேளாளர் மரபில் சண்முக சிகாமணிக் கவிராயரும் அவரது மனைவியார் சிவகாமசுந்தரி அம்மையாரும் நீண்டநாட் செய்த பெருந்தவப்பயனல் பிறந்தருளிய சிறந்த தெய்வக் குழந்தையாகிய குமரகுருபரர், ஐந்தாண்டளவும் வாய் பேசாது ஊமையராகவே யிருந்தார். ஐந்தாம் ஆண்டில் செந்தில் கந்தவேள் திருவருளால் ஊமை நீங்கி உயர் கவிதை பாடத் துவங்கினர். ஏழாம் நூற்றாண்டில் சீர்காழியில் பிறந்த தெய்வத் திருக்குழந்தையாகிய ஞானசம்பந்தர் மூன்றாண்டுப் பருவத்தில் முத்தமிழ்ப் பாடல் பாடினர் எனப் பெரிய புராணம்

பேசக்கேட்டோம். அதன் பிறகு பதினான்காம் நூற்றாண்டில் சைவத் தலைநூலாம் சிவஞான போதம் அருளிச் செய்த மெய்கண்ட தேவர் இரண்டாண்டுப் பருவத்திலேயே மெய்கண்ட போதத்தை மேதினிக்குத் தந்தருளினார் என நூல்கள் சொல்லக் கேட்டோம். அதன் பின்னர்க் குமர குருபரரே, ஐந்தாண்டுப் பருவத்தில் அருங் கவிதை பாடினார் என அறிகிறோம். குமாகுருபரருக்குப் பின்னர், நம் தென்பாண்டி நாட்டிலேயே மற்றொரு தெய்வக் கவிஞர் திரு அவதாரம் செய்தார். அவர்விக்கிரம சிங்கபுரத்தில் தோன்றிய சிவஞான முனிவர். இவரும் ஐந்தாண்டுப் பருவத்தில் செந்தமிழ்க் கவிபாடிய சீரிய புலவர் பெருமானார். இவருக்குப் பின் ஒரு நூற்றாண்டுக்கு முன்வர் மற்றொரு தெய்வக் கவிஞர் திகழ்ந்தார். அவர் ஒன்பதாண்டுப் பருவத்தில் பொன்போன்ற கவிதை புனைந்த அருட்புலவர்—அருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள். இத் தகைய அருட்கவிஞர்களின் திறமெல்லாம் கேட்போர்க்கு வியப்பை யளிப்பதோடல்லாமல் ஒரு சிலர்க்கு ஐயத்தையும் உண்டு பண்ணலாம். அங்ஙனம் ஐயுறுவார்க்கு ஒரு செய்தி கூறுகிறேன். இன்றும் பர்மாவிலே நாலாண்டு குழந்தையொன்று, கணித வல்லாரும் செய்தற்கரிய பெருங் கணக்குகளை எல்லாம் சொல்லியவுடனே விடை பகர் கின்றதே! சில நாட்களுக்கு முன் செய்தித் தாளில் வெளியான செய்தியொன்றை நீங்களும் கண்டிருப்பீர்கள் வடநாட்டில் பிறந்த குழந்தை ஒன்று, இரண்டு ஆண்டுகள் நிரம்பியது, தற்போது பல மொழிகளையும் தட்டுத் தடையின்றி பேசுகிறது. அக்குழந்தைக்குத் தாய்மொழி ·இந்துஸ்தானி. ஆனால் ஆங்கிலம், தெலுங்கு போன்ற மொழிகளை அழகுறப் பேசுகிறதாம். தன் தாய்க்கு ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுக்கிறதாம். இதனை நம்புகிறீர்களா? செயல் கண்

ணெதிரே நடைபெறுகின்றது! கண்ணாரக் கண்டு களித்த வர்கள் அவ்வியப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள். நாமும் அதனை நம்புகிறோம். இதுவெல்லாம் ஒரு தெய்வப் பிறவி யென்று சொல்லிப் பாராட்டுகிறோம். அம்முறையில்தான் தெய்வப் பிறவியாய், கருவில் திருவுடையராய்த் தோன்றிய கவிஞர் குமரகுருபரர். ஒரு நாட்டுக்குப் பெருமை, அந்நாட்டில் தோன்றிய சான்றோரால் ஆகும். தமிழ் மூதாட்டியாராகிய அவ்வையாரும் இக்கருத்தை வலியுறுத்துகிறார்.

“ நாடா கொன்றோ—காடா கொன்றோ
அவலா கொன்றோ—மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே ”

என்று நிலத்தைப் பாராட்டினர். திருமுனைப்பாடி நாட்டின் சிறப்பைக் குறிப்பிடப் புகுந்த சேக்கிழார் பெருமான்,

“ மறந்தரு தீநெறிமாற மணிகண்டார் வாய்மைநெறி
அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானல் நம்மளவோ பேருலகில்
சிறந்த திருமுனைப் பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு ”

என்று வியந்து மொழிந்தார். நாவுக்கரசரும், சுந்தரரும், பிறந்தருளும் பெருமையுற்றது திருமுனைப்பாடி நாடு என்று போற்றிப் பேசினர்.

நம் தென்பாண்டி நன்னாடோ குமரகுருபரரும் சிவஞான முனிவரும் திருவவதாரம் செய்த பெருமையுடையதாகும். இருவரும் சைவத் தெய்வக் கவிஞர் பெருமக்கள். பிற்காலத்தில் குமரகுருபரரைப் போன்று தமிழ்ப் பாடல் பாடினர் எவருமிலர். அவர்க்கே, தெய்வவாக்கு என்று சொல்லும் நல்லாற்றல் உடையது. பிற்காலத்தில் சிவஞான முனிவரே சிறந்த உரைவல்ல பெரியாராக விளங்கினர். மெய்கண்டார் சிவஞான போதத்திற்கு அவர்

வரைந்தருளிய உரை போன்று, உரை வரைந்தார் பிற்காலத்தில் எவருமிலர். ஆகவேஇவ்விரு பெரும் புலவர்களும் முறையே பாட்டாலும் தமிழ் உலகுக்கு இணையற்ற பணி புரிந்தவராவர். திருச்செந்தில் முருகப்பெருமான் திருவருளால் ஐந்தாண்டு பருவத்தில் ஊமைத்தன்மை நீங்கி வாய் பேசத் துவங்கியதும் அம்முருகன் திருமுன்பு அவர் பாடிய நூல் “ கந்தர் கலிவெண்பா ” என்பதாகும். நக்கீரர் பாடிய. திருமுருகாற்றுப் படைக்குக் கந்தர் கலிவெண்பாவில் பொருள் காணலாம். அரிய சித்தாந்த உண்மைகள் நிறைந்த தத்துவ நூல் கந்தர் கலிவெண்பா. சைவாகமங்களில் அத்துவாப்பிரகரணத்தில் பேசப்படும் அத்துவாப் பகுதிகள் மிகமிக அருமை வாய்ந்தன. எளிதில் சிற்றறிவுடையாரால் எட்ட முடியாதன. அத்துவாக்களைப் பற்றி யறிவது, கந்தபுராணம் அண்டகோசப் படலத்திற்கு உரை காண்பது போலத்தான். சிறந்த சித்தாந்தவல்லாரும் அத்து காண்பது பற்றிச் சொல்ல அறியார். அத்தகைய அத்துவாக்களின் இயல்பைத் தெளிவுறத் தம் கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரர் கூறுகிறார். தெய்வத் திருவருள் கைவந்தமையின் அங்ஙனம் எடுத்துக்காட்டும் ஆற்றல் பெற்றனர்.

குமரகுருபரர், குமரவேள் அருள் பெற்ற அவ்விளமைக் பருவத்தில் திருமுருகன் கோலத்தைக் கண்களால் தரிசித்தார். தாம் கண்ட இனிய அருட் காட்சியை நமக்குப் பாடலாகத் தந்துள்ளார் :—

(1) யான், எனது என்பது அற்ற இடமே - அவனது திருவடி ; (2) மோனபரமானந்தம் - முடி, (3) ஞானம் - திருவுரு ; இச்சை; செயல் ; (4) அறிவு - கண்கள்; (5) அருள் - செங்கை ; (6) இருநிலமே - சந்நிதி ; இங்ஙனமாக விளங்கும் தனிச்சுடர் முருகப்பெருமான் என்று கண்டு கூறினர் :—

" யானென தென்றற்ற இடமே திருவடியா
மோன பரமானந்தம் முடியாக—ஞானம்
திரு வுருவாவிச்சை செயலறிவு கண்ணு
அருளதுவே செங்கையாரா—இருநிலமே
சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே யெவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே "

என்பது அவர் வாக்கு.

தம்மைப் பேசுவித்த செயல் முருகனுக்கு அத்துணை பெருஞ் செயலன்று. அதற்கு நன்றி செலுத்தல் முறையன்று என்று கருதிய கவிஞர், அக்கடவுள்பால் வேண்டும் விண்ணப்பத்தைப் பாருங்கள்.

" ஆயும் பழைய அடியாருடன் கூடித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக்கால் காட்டி யாட்கொண்டு
அடியேற்கு முன்னின்றருள் "

இறையருள் பெற்ற அடியவரெல்லாம் இறைவன் பால் வேண்டுவதுஇதுவே, தம்மையும் அடியார்கூட்டத்துள் ஒருவராகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றே வேண்டுவர். "தொண்டரொடு கூட்டு கண்டாய்' என்று வேண்டினர் மற்றொரு தமிழ்க் கவிஞர் தாயுமானர்.

இனிக் குமர குருபரர் முருகன் அருள் பெற்றுக் கந்தர் கலி வெண்பாப் பாடித் தமது பிறப்பிடமாகிய ஸ்ரீ வைகுண்டத்தை அடைந்தார். அங்கு எழுந்தருளிய சிவனைக் கலம்பகத்தால் போற்றித் துதித்தார். அந்நூல் கயிலைக் கலம்பகம் எனப்படும். அதில் ஓரிரண்டு பாடல்களே தற்போது கிடைப்பனவாகும். அவற்றில் ஒரு பாட்டைக் கூறுகிறேன். "பொன்னம்பலத்தும் வெள்ளி மன்றும் பொதுவென்று உரிமைத் திருத்தொண்டர் நன்னெஞ்சகத்து நாடகம் செய் நடத்தார் கயிலை யிடத்தாரே !" என்பது கயிலைக் கலம்பகத்தின் ஒரு பாடல், அம்பலம், மன்று

என்பன பொதுவிடங்கள் ஆகும், பொன்னம்பலம், வெள்ளி மன்று இவையெல்லாம் எல்லார்க்கும் பொதுவான இடங்கள். தமக்கெனச் சொந்தமன்று. இங்ஙனம் உரிமையில்லாத இடங்கள் பெருமை தருவனவல்ல என்று எண்ணிய இறைவன் அடியார்களின் நன்னெஞ்சத்தைத்தான், தனக்கு உரிமை வாய்ந்த இடமாகவும், பெருமை தரும் இடமாகவும் மேற்கொண்டான் என்று குமரகுருபரர் குறிப்பிட்டார்.

பின்னர் வடநாட்டு யாத்திரையை மேற்கொண்டு மதுரைமா நகரை யடைந்தார். மதுரையில் எழுந்தருளியுள்ள அங்கயற் கண்ணம்மையை, மீனாட்சித் தாயைப், பிள்ளைத் தமிழால் போற்றிப் பாடினார். மதுரையை அப்போது ஆண்ட திருமலை நாயக்க மன்னன் அங்கையற் கண்ணம்மையின் கட்டளையால் பிள்ளைத்தமிழை அரங்கேற்ற வேண்டுவன செய்தான். அம்மையின் சந்நிதியில் நூல் அரங்கேறியது. பிள்ளைத் தமிழில் பத்துப் பருவங்கள் பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் தினமும் ஒவ்வொரு பருவமாக வாசித்துக் குமரகுருபரர் பொருள் விரித்தார். ஆறுவது நாளில் வருகைப்பருவம் அரங்கேற்றம் நடைபெறுகிறது. ஒன்பதாவது பாட்டு வாசிக்கத் துவங்கினார். அழகிய தூய தமிழ்ச் சொற்களால் ஆகிய அரிய பாட்டு, குமரகுருபரரது ஆழ்ந்த உள்ளத்திலிருந்து பொங்கி எழுந்த அன்பெல்லாம் ஒரு வடிவாகத் திரண்ட பாட்டு, உள்ளுருக ஊனுருகப் பாடினார் குமரகுருபரர். ‘வருக ; வருக’ என்று கொஞ்சும் தமிழால் கூப்பிட்டார். தாய் மீனாட்சி குழந்தை வடிவோடு உண்மையாகவே ஓடோடி வந்துவிட்டாள். மன்னன் மடியமர்ந்து பாடல் முழுதும் கேட்டுப் பரவசமடைந்தாள். கவிஞரைப் பாராட்டும் கருத்துடன் அரசன் கழுத்திலணிந்திருந்த முத்தாரத்தைக் கழற்றிக் கவிஞர் கழுத்திலணிந்து மறைந்தாள். மெய்ம்மறந்து கவிஞ

ரின் சொல்லின்பத்தில் திளைத்திருந்த அவையோர் இருந்த குழந்தை திடீரென்று மறைந்ததும் தன்னுணர்வு பெற்றனர். அம்மையின் அருள் விளையாட்டெனஅறிந்தனர். புலவரின் அருள் திறனை வியந்தனர். இங்ஙனம் குமரகுருபரரின் அமரத்தன்மை புலப்படுவதற்குக் காரணமாக இருந்த அருந்தமிழ்ப் பாடலைத் தமிழராகிய—சைவப் பெருமக்களாகிய நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். அறியாதிருக்கமாட்டீர்கள்! அவ்வளவு சிறந்த பாடல் அது. "தோடுக்கும் கடவுள் பழம்பாடல்" என்று துவங்கும் பாட்டு, வேதப் பயனுப் விளங்குபவளே! தமிழில் அகத்துறை புறத்துறைகளையுடைய தீந்தமிழில் ஒழுகும் நறுஞ்சுவை போன்றவளே! அகங்காரம் ஆகிய கிழங்கைத் தோண்டியெறிந்த தொண்டர்களின் உள்ளக் கோயிலுக்கு ஏற்றும் சுடர் விளக்கே! இமயமலையில் விளையாடும் பெண்யானை போன்றவளே! சிவன் தன் திருவுள்ளத்தில் இடையறாது அழகொழுக எழுதிப் பார்த்து மகிழும் உயிர்ச் சித்திரமே; வண்டு மொய்க்கும் மலர்க் கூந்தலைத் தாங்கிய வஞ்சிக்கொடியே! மலையத்துவச பாண்டியனது பெருஞ் செல்வமே; வருக; வருக; என்று 'உள்ளமுருக உயர் தமிழால் அழைத்தார்.

கவிஞரின் அருள் திறனை யறிந்த மன்னன் திருமலை நாயக்கன், தன்னொடு சின்னாள் மாளிகையில் தங்கவேண்டுமெனக் குமரகுருபரரை பணிந்து பெரிதும் வேண்டினான். அங்குச் சின்னாள் தங்கியிருந்தபோது மீனாட்சியம்மை குறம், இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம் போன்ற நூல்களை இயற்றினார். ஒருநாள் மன்னன் உணவு கொள்ளக் காலம் தாழ்ந்தது. அதுகண்ட குமரகுருபரர்

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்றார். இப்பாட்டைக் கேட்ட மன்னன், அதன் பொருள் நுட்பத்தை யுணர்ந்தான். இப்பாடலையுடைய தமிழ் வேத மாகிய திருக்குறளின் பெருமையைத் தெரிந்தான். 1330 அருள் குறளும் ஒருங்கு, தான் கற்றுணர்தல் இயலாதென எண்ணினான். அப்பெருநூலின் கருத்துக்களைச் சுருக்கிச் சிறு நூலாகத் தரவேண்டுமென வேண்டினான். உடன் அருளிச் செய்தார் நீதிநெறி விளக்கமென்ற அரிய நீதி நூல். நூலின் சிறுமையையும் அதன்கட் பேசப்பெறும் பொருளின் அருமையையும் மன்னன் உணர்ந்தான். எங்கள் நெல்லை நாட்டிலுள்ள ஆண்டு ஒன்றுக்கு இருபதினாயிரம் பொன் வருவாயுள்ள அரியநாயகபுரத்து வருவாயைக் குமரகுருபரருக்குக் கொடுத்து மகிழ்ந்தான். குமர குருபரர் இயற்றிய நீதிநெறிவிளக்கம் குட்டித் திருக்குறள் என்று கொண்டாடப்படும் தண்டமிழ் அறநூலாகும்.. இந்நூலில் வஞ்சக நெஞ்சம் படைத்த கொடியவர்க்கு அறவுரையொன்று கூறுகிறார் குமரகுருபரர். அக்கொடியரை மதியிலிகள், என்றே அழைக்கிறார். அவ்வஞ்சகர்கள் எல்லோரும், தம் திறமையால் ஏமாற்றிவிட்டோம் என்று பெருமை யடைகிறார்கள். அத்தகைய பெருமை யடைவது இழிவேயென்றும், அவ்வஞ்சகர்க்கு இறைவன் தக்க தண்டனை தந்தே தீர்வான் என்றும் நன்கு அறிவுறுத்துகின்றார்.

“ வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் ; யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின் வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவது அறிவு ”

என்று அறவுரை மொழிந்தார். பின்னர் சின்னாட் கழித்துத் தருமை ஆதீனம் அடைந்து அங்கு நாலாவது பட்டத்தில் அருட் செங்கோல் செலுத்திய மாசிலாமணி தேசிகரின் மலராடி பணிந்தார். அவர்பால் ஞானோபதேசம்

பெற்றார். தமக்கு உபதேசம் அருளிய ஞானசிரியரின் அருள் திறத்தைப் பாராட்டி, அவர்தம் திருவடிக் காணிக்கையாக இவர் பாடிய பண்டார மும்மணிக்கோவை சிறந்ததொரு தத்துவ சாத்திரமாக விளங்குகிறது. அதில் ஒரு பாட்டு:-

மணியென்பது இரத்தினம். நவரத்தினங்களையும் குறிக்கும். இரத்தின வணிகரிடம் சென்று, இரத்தினத்தை விலைபேசி அதனை நம் கையில் பெற்றுக்கொண்டு பின்னர்ப் பணமொன்றை மட்டும் கொடுக்கிறோம். ஆனால் ஞானசிரியராகிய மாசிலாமணியைப் பெற வேண்டுமாயின் அம்மணியைப் பெறுவதற்கு முன்பே, பார்த்தவுடனேயே பணம் மட்டுமன்று, உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணம் செய்து விடுவர் என்று மாசிலாமணி தேசிகரின் தேசுற்ற திருவருள் திறனை வியந்து பேசுகிறார்.

“பொன்னே யல்லாமல் பொருளோடு உடல்உயிர் விற்று
என்னே மணியொன்று எவர்கொள்வார்—கொன்னே
குருமா சில்லாமணியைக் கொள்வோர், கொள்ளாமுன்
தருவார் மற்றுஇம் மூன்றுந்தான்”

என்பது அவர் தம் பாடல்.

பின்னர்ச் சிதம்பரம் சென்றார். பொன்னம்பலக் கூத்தனைப் புகழ்ந்து பல பாக்களால் துதித்தார். அம்பலக்கூத்தன் ஆடலை அருகில் நின்று இடையறாது கண்டு மகிழும் சிவகாமியின் அருள்விழி நோக்கினைக் கண்டார், உடன் ஒரு கற்பனை செய்தார். பொன்னம்பலம் ஒரு பொன் தாமரைப் பூ; நடம் புரியும் கூத்தப் பெருமான் அப்பூவில் ஊறும் தேன்; அத்தேனை உண்டு களிக்கும் வண்டுகள், எம்பெருமாட்டியின் விழிகள்! என்று வியந்து கற்பனை செய்தார். எவ்வளவு அழகிய கற்பனை: பாருங்கள் பாட்டை

“பொன் மன்றம் பொற்றாமரை யொக்கும்—அம்மன்றில்
செம்மல் திருமேனிதேனொக்கும் அத்தேனை
உண்டு களிக்கும் களிவண்டை யொக்குமே
எம்பெரு மாட்டி விழி.”

பின்பு குமரகுருபரர், ஞானசிரியரின் கட்டளைப்படி காசிமா நகர்க்குச் சென்று அங்கு ஆண்ட முகலாய மன்ன

ஹுன ஔரங்கசீப்பைக் கண்டு பேச முற்பட்டார். அவ னிடம் மடம் கட்ட இடம் பெற விரும்பினர். அவனது தாய் மொழியாகிய இந்துஸ்தானி மொழியைத் தானறிந்து அவனேடு சல்லாபமாக உரையாட விரும்பினர். கலைமகள் கருணையை நாடிச் சகலகலா வல்லிமாலை பாடினர். பத்துப் பாடல்கள் பாடினர். இறுதிப் பாடல் பாடியதும்கலை மகள் காட்சி யளித்தாள். கருணை புரிந்தாள். இந்துஸ் தானி மொழியிற் பெரும் புலமை பெற்ருர். மன்னன் ஔரங்கசீபின் முன்னர் சென்ருர். அவன் சிங்காதனத் தமர்ந்திருந்தான். இவர் உயிருள்ள சிங்கமொன்றின்மீது ஏறிச்சென்று அவன்முன் நின்று, இந்துஸ்தானி மொழி யில் பேசத் துவங்கினர். குமரகுருபரது பெருமையைத் தெரிந்தான் ஔரங்கசீபு. உடன் வேண்டும் உதவியளித் தான். பெரியதொரு மடம் கட்டினர். காசிமா நகரத்தில் இன்றும் சைவத்தின் மாண்பையும், தெய்வத் தமிழின் பெருமையையும்பேசி நிற்கிறது காசிக் குமாரசாமியிடம். கங்கைக் கரையின் கண்நின்று,

“ மண்கண்ட வெண்குடை கீழாக
மேம்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவில் பணியச் செய்வாய் ”

என்று முழங்கிய கவிஞர் பெருமானுகிய குமரகுருபரர் கங்கை கொண்ட கவிகாவலராகத் திகழ்கின்ருர். அன்று 12-ம் நூற்ருண்டில் கங்கைவரை படை எடுத்துச் சென்று முடிமன்னரைவென்ற, இராசேந்திர சோழன், கங்கை கொண்ட புவிகாவலன் எனப்பட்டான். அவன் இமயத் தில் நாட்டியகொடி இன்றில்லை. ஆனல், நம் கங்கை கொண்ட கவிகாவலர் காசியில் நாட்டிய தமிழ்க் கொடியும் சைவக்கொடியும், குமாரசாமி மடமாகக்குளிர்ந்த காட்சி நல்கி அங்குச் செல்லும் தமிழரை யெல்லாம் தாயென அணைத்துத் தமிழருள் சுரந்து நிற்கின்றது. அஃது இன் றும் கண்டு மகிழும் காட்சியாகும்.

தென்னுடைய சிவனே போற்றி
என்னாட் டவர்க்கும் இறைவா போற்றி.

——

உயர்வு வேண்டும்

(அழகுமதியன்)

" செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
....
யானை வேட்டுவன் யானையும் பெறுமே,
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே,
அதனால்,
உயர்ந்த கோட்டத் துயிர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்
....
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே"

என்று வற்புறுத்தினர் ஒரு சங்கப் புலவர். எந்தச் செயலை மேற்கொள்ளினும் ஓர் உயர்ந்த குறிக்கோளை முன்னிட்டே செல்ல வேண்டும். வாழ்க்கையில் வெற்றியை விரும்புபவன் சிறந்த குறிக்கோள் ஒன்றை வைத்துக் கொண்டே அதனை அடைய முயலவேண்டும். சின்னஞ் சிறிய கருத்துக்களில் நாட்டம் கொண்டு அவைகளில் திருப்தி உறுதல் அறிவுடைமைக்கு அழகன்று என்பதே அந்தப் புலவரின் கொள்கை. "இதனைப் பண்டைத் தமிழன் கூறினன். இற்றைக்குத் தமிழன் கையாளவில்லை, அதனாலே அரசியலிலும் தோற்றான். சமய மேம்பாட்டிலும் தோற்றான். அதனை அறிந்து உயர்தலையே கைக்கொண்டு வாழ்க்கையின் பயனை அடைய வேண்டும்" என்றார் ஈழ நாட்டில் ஒரு பெரியார்.

இப்பெரியார் புகழைப் பலரும் அறிவார்கள். ஈழ நாட்டிற்குச் செல்லும் படித்த மக்கள் பலரும் இப்பெரியாரைக் கண்டுவிட்டு அவருடைய பொன்மொழிகளைக்

கேட்டுவிட்டு வருவதுண்டு. நானும் எனது நண்பர்களும் அண்மையிலே ஈழநாடு சென்றபோது இப்பெரியாரைக் காணவேண்டும் என்று விழைந்து சென்றோம். நாங்கள் சென்றபோது அவ்வூரில் தமிழ்த் திருவிழா நடைபெற்று வந்தது. பெருங்கூட்டத்தை அப்பெரியார் விரும்புவதில்லை. ஆகவே, வேறு ஓர் இடத்திற்குச் சென்றுவிட்டார்.

விழாப்பம்பல் முடிந்த பிறகு நாங்கள் ஒருநாள் அவரைக் காணச் சென்றோம். சில பழங்களைக் கையுறை யாக எடுத்துச் சென்றோம். ஒரு வளைவுக்குள் கூறையால் வேய்ந்த தனி அறை ஒன்று இருந்தது. அதில் ஒரு புறத் தில் அப்பெரியார் அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே ஒருபுறமாக இரண்டு ஆண்மக்களும் மற்றொரு புறமாக இரண்டு பெண்மக்களும் உட்கார்ந்திருந்தார்கள். ஒரு பெண்மணி ஒரு நூலைப் படித்துக்கொண்டிருந்தாள். அது யோகாப்பியாசத்தைப் பற்றிய ஒரு தமிழ் நூல். அவள் படிக்கப் படிக்க ஒவ்வோர் இடத்தில் சிற்சில கருத்துக்களை அப்பெரியார் வெளியிட்டார். நாங்கள் அறைக்குள் சென்று அப்பெரியாரை வணங்கவே, அவர் எங்களை வரவேற்று அமரச் சொன்னார். அப்பெண்கள் படித்து முடித்தபிறகு அவர்களுக்குச் சில சொற்களைக்கூறிவிட்டு வழியனுப்பினர். அவர்களின் குடும்பத்தார்களின் நலத்தை விசாரித்து நலம் உண்டாகும் என்று ஆசீர்வதித்தார். பிறகு எங்களை நோக்கிப் புலன் விசாரித்தார். சிறிது நேரம் சில அரிய சொற்களைக் கூறினர். அதன் கருத்துத்தான் மேலே எழுதப்பட்டது.

அப்பெரியாருக்கு வயது அறுபது என்று மதிக்கக் கூடும். ஆனல் விசாரித்ததில் தொண்ணூற்று ஆறு என்று தெரிந்தது. அவரது உடல் கட்டுச் சரீரம். நாள்தோறும் செய்துகொண்டு வரும் சாதனங்களினல் அவ்வாருன

உடல் உறுதி பெற்றிருக்கின்றார் என்று எண்ணினேம். சைவ நூல்கள் கூறும் நால்வகைச் சாதனங்களில் மூன்றாவதான சாதனத்தை இப்பெரியார் போற்றி வந்திருக்கின்றார். அவரது பேச்சால் அவர் நிரம்பப் படித்திருக்கின்றார் என்று அறிந்தோம். திருக்குறள், திருமந்திரம், பண்டார சாத்திரம் (சொக்கநாத வெண்பா) முதலியவைகளிலிருந்து பல மேற்கோள்களை எடுத்துக் கூறினார். அவைகளின் கருத்துக்களையும் தெளிவாகச் சொன்னார்.

"'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்பது அன்றோ பெரியோர் வாக்கு. யான் இப்போது அடைந்துள்ள நிலைமையை நீங்களும் அடையமுடியும், அடையவும் வேண்டும். அடையவும் விழையுங்கள். கீழான நிலைகளில் விருப்பம் வேண்டாம். அவைகள் எளிதில் கிடைக்கும். ஆனல் மறைந்துபோகும். ஆகவே உயர்ந்த நிலையையே கோருங்கள். அது கிடைக்கும். கீழான பயன்களில் கொள்ளும் நாட்டம் சரியன்று. நாளுக்கு நாள் மேன்மையையே அடைய முயற்சி செய்யுங்கள்" என்றார் அப்பெரியார்.

'பாமரமக்கள் விரும்பும் சாதாரண வழிபாட்டில் இறுதிப் பயன் காணுதல் சரியன்று. நமது உயிர் ஈடேற்றம் அடைய மேம்பட்ட சாதனமே சரியானது' என்று அன்னார் கூறிய சொற்களால் அறிந்தோம். அம்மேம்பாடு அடைய எல்லாரும் முயலலாம். கடினம் என்று அதனைக் கூறவேண்டியதில்லை. ஒரு மாளிகைக்குப் படிகளின் மீது ஏறிச் செல்லுவதுபோல் கீழ்நிலையில் உள்ள ஒருவன் மேல் நிலைகளுக்குச் செல்லுவதே முறை என்று அவரது வாயால் அறிந்தோம். அவரிடம் அன்று சில வினடிகள் கேட்டதில் இருந்து மேலே எடுத்துக் காட்டிய சங்கச் செய்யுளின் பொருளை அறிந்தோம். வேட்டையாடச் செல்லுபவரில்

யானையை விழைந்தவன் யானையைப் பெற்றான். குருவி யைப் பிடிக்கச் சென்றவன் அக்குருவியையும் பெறாமல் திரும்பினான். ஆகவே உள்ளம் கருதவேண்டியது உயர்வு ஆகும் என்ற கொள்கையே நமக்கு வேண்டியது அல்லவா ?

" தாயும்-சேயும் "

அ. தா. ப திருஞானசம்பந்தன்

நம்மைப் பத்து மாதங்கள் சுமந்து பெற்று, அழும் பொழுது பாலூட்டி, தொட்டிலில் இட்டுத் தாலாட்டி மகிழ்வடைபவள் யார் ? தாய்தான் ! உலகத்தில் உள்ள ஏனைய தாய்மார்களும் தாயராவார்களா ? ஆகமாட்டார். ஏன் ? " பெறுமவற்றுள் யாமறிவதில்லை, அறிவறிந்த மக் கட் பேறல்ல பிற " என்ற தெய்வத் திருவள்ளுவனார் உவப்புடன் கூறிய வாய்மொழிக்கேற்ப வாழும் பெற்றிமை பெற்றவர்களே தாயென அழைக்க மிகுதியும் உரிமைப் பட்டவர்கள். இரு முதுகுரவர் எனத் தாயும், தந்தையும் பற்றிச் சிறப்பு செய்து பேசினும், முன்னதே தனி உரி மையும், பெருமையும், பேரிடமும் அறிஞர்களிடத்தும், கலைவாணர்களிடத்தும், ஞானிகளிடத்தும் பெறுகின்றது. காரணம் என்னை ? அளவிடற்கரிய பெருமையும், புகழும் அது பெற்றுள்ளமையால்தான் !

இளமையிற் றுறவு பூண்ட வெண்காடரென்னும் பட் டினத்தடிகளை இன்றையத் தமிழ் நாட்டில் தெரியாதார் யாரும் இரார் எனலாம். அவர் தாய்மேல் கொண்ட பற்றை வாய்விட்டுச் சொல்ல இயலுங்கொல் ? தாய்-தன்னை ஈன்ற வள்-இறைவன் இணையடிகளை எய்தினாள் என்ற செய்தி யைக் கேட்டு அவர் பெற்ற துயருக்கு அளவும் உண்

டாமோ ? ஈமக்காட்டில், கட்டைகள் அடுக்கப்பெற்று அதன்பால் வைக்கப் பெற்றிருந்த தாய் உடலை நீக்கி, வாழைப் பட்டைகள் குளிர்ச்சி பொருந்த அமைத்து, அதன்மேல் தாய் உடலை வைத்து, ஈமக் கடன் முடிக்குந் தறுவாயில் அவர் பாடியுள்ள பாக்கள் யாரைத்தான் கரைக் காது ? அப்பாடல்கள் வன்னெஞ்சக் கள்வரையும், இரும் புப் பாறைபோன்ற உள்ளத்தவராயினும், உருக்கிக் கண் ணீர் விடச் செய்யும். ஓர் மாபெருஞ்ஞானியே - ஊழிபெயரி னும், தான் பெயரு நிலை பெற்றவரே - தன் தாயின் இன் னுயிர்ப் பிரிவிற்கு ஆருத் துயர் கொள்கிருர் எனின் மற்றை யோரைப் பற்றிச் சிந்திக்கவும் வேண்டுமோ ? அவர் பாடிய பாடல்களைக் காண்க.

பத்துமாதங்கள் ஐயோ வென்னுமாறு சுமந்து கால் முதல் தலையளவுள்ள உறுப்புக்கள் அனைத்தும் வருத்த மடைந்து பிரசவித்து, ஆண்குழந்தையென அருகிலுள்ளார் கூறக் கேட்டவுடனே விரும்பிக் கைதனில் எடுத்துச் செவ் விய இரண்டு கையினிடத்தில் தாங்கிப், பொன்னணி பூண்ட தனங்களிலுள்ள பாலினை உண்ணுமாறளித்த அன் னையை, இனி எந்த பிறப்பிற் காணப் போகிறேன் என்கிருர் அடிகள்.

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை,
எப்பிறப்பிற் காண்பேன் இனி.

அன்னையானவள் தான் பெறுதற்கு மிக்க கவலை உண் டாகி இளைப்புற்றுக் கிடக்குங் காலத்தில், " பிறந்தது ஆண் மகவு " என்று சொல்லக் கேட்டால், இளைப்புக் களைப்பு களை, ஒரு பொருட்டாக மதியாது விரைந்தெழுந்து குழந்

தையை எடுத்துப் பாலூட்டுவது உலக வழக்கமாதலை யிங்கு விளக்கி, அவ்வாறு தம்மையுஞ் செய்த அன்னை யிறந்ததற்காக இரங்கி, " எப்பிறப்பிற் காண்பேன் இனி" என்கிறார்.

பிள்ளைப்பேறு வேண்டு மென முன்னே தவஞ் செய்து கிடந்து கருப்பதிந்த நாள் முதல் முந்நூறு நாள் வரையும், இரவிலும் பகலிலும் ஆகச் சிவபெருமானைப் பிரார்த்தித்து, வயிறு முன் தள்ள என்னைச் சுமந்து பிரசவித்த அன்னைக்கோ பற்றி எரியும் வண்ணம் தீயைப் பற்ற வைப்பேன்.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாளளவும்
அந்தி பகலாச் சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தனக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

புத்துலகச் சிற்பி, புரட்சியின் சின்னம், கவி-சுப்பிரமணிய பாரதியாரை, இன்றையத் தமிழ்நாட்டு அரசியற்றலைவர்களும், அன்றி நம் தாய்த் திரு நாட்டு மக்களும், வானளாவப்போற்றுவதைக் கண்டுங் கேட்டும் இறும்பூதெய்து கிறோம். அத்தகைய ஒரு கவிஞர் கவிதைகளைச் சமர்ப்பணம் செய்வதற்கு முன்னர் என்ன கூறியுள்ளார் தெரியுமா ?

" *பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்*
நற்றவ வானினும் நனிசிறந்தனவே " என்றும்,
" *தாய்த்திரு நாடுதனை கும்பிடடி பாப்பா* ".

என்றல்லவோ, ஆர்வம் பொங்கிட, மகிழ்ச்சிமேலிட, வீரம் வென்றிட, அன்பு ததும்பிடப் பாடியுள்ளார். இங்ஙனம் தாயை முதற்கண் அமைத்துப் பா இயற்றுவானேன்? தந்தையை வைத்து ஏன் பாடக் கூடாது ? " சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே " என்ற புறநானூறு வாக்கியத்திற்கு இலக்காக, மகனை நல்ல கல்வி கேள்விகளில் சிறக்க

வைத்துப், பெரும் புலவன் என அறிஞர்கள் மெச்சவும் அன்றிப் பாரிடை வாழ் மக்கள் அவனைப் பலவாறு பாராட்டிப் பேசும் நிலைக்குத் தந்தை கொண்டு வருகிறாரே ? இவ்வனைவற்றையும் உணர்ந்திருந்தும் புலவர்கள் தாயை அல்லவோ முதன்மையிடந் தந்துப் போற்றுகிறார்கள் என்ற ஐயம் நம்மிடம் எழத்தான் செய்யும். இதற்கு முடிவு புதிதாக நாம் ஒன்றுங் காண இயலாது. முடிந்த முடிபாக, தாய் அன்பே சாலச் சிறந்ததென அறிஞர்களும், அடியார்களும் ஆழ்வாராதியர்களும், நாயன்மார்களும் முடிவு கட்டியிருக்கின்றனர். அம் முடிபே தீர்ந்த முடிவாகக் கொள்ளல் வேண்டும். இவ் வுலகத்தில் வாழும் எவரேனும் தன் நாட்டைத் தந்தைநாடு என்று கூறக் கேட்டிருக்கின்றோமா ? இல்லையே ! தாய் நாடென்றல்லவோ (Mother-Land) அழைப்பதைக் காண்கிறோம். ஆகையால் இதினின்றும் நாம் அறிவது என் ? தொன்று தொட்டுத் தாய்க்கே தனிப் பெருமையும் சிறப்பும் இருந்து வருவதை அறியலாம். இலக்கியப் புலவர்களைக் கண்டக்கால், அவர்கள் பெற்று வளர்க்கும் தாய்பற்றிய சிறப்புரைகளை மட்டில் அதிகமாகக் கூறிச் செல்வர். இனி நாம் சமயக் கண்களைக் கொண்டு, ஊடுருவித்துருவி, நம் பிறவித் துன்பத்தைப் போக்கி அருள் பாலிக்கும் தயாபரநிலையுடைய தாயினைக் காணும் முகமாகச் செல்வோம்.

தாய்மை என்றாலே, தண்மை, பொறுமை, முகப் பொலிவு, இன்சொல், ஆழ்ந்த இன்ப நோக்கு இவையெல்லாம் நம் கண்முன் தோன்றுகிறது. ஒரு தனயன் தனக்கு வேண்டிய ஒரு பொருளுக்காக, தந்தையிடம் நேரில் சென்று, எடுத்து விளக்கிக் காரணங் காட்டினும், ஒரு வேளை நல்லதிர்ஷ்டமிருப்பின் உடனே பெற்றும், இன்றேல் தீதெனத் தந்தைக்குப் படின், வசைமொழிகளை வகையாகப்

பெற்று மீள்வான். அன்பே உருவெனத் திரண்டெழுந்த தாயின் வழியாகத் தன் வேண்டுகோளை விட்ட அளவில், காரிய காரணங்களை எடுத்து விளக்கித் தான் கோரிய பொருளைப் பெறுது, வாய்விட்டுச் சொல்லியவுடன் தான் வேண்டியதை முற்றுப் பெற்றுவித்துக் கொள்வதை இன்றைய இளைஞர் உலகம் நன்கறியும். இது உலக இயற்கையுங்கூட. இந்த நிலையைக் கொண்டுதான் போலும், ஞானிகள் என்ற பிள்ளைகள் இறைவனைத் தந்தை வழியில் வழிபடுவதைவிடத், தாய் உருவில் வழிபட்டிருக்கிறுர்கள் போலும். ஒவ்வொரு ஞானப் பெருமக்களும் "தாயே" என விளித்தழைத்து தங்கள் வேண்டுகோளை அன்னூரிடம் சமர்ப்பித்துப் பேற்றை, பெறமுயல்வதைக் கண்டக்கால், "நாம் பெறும் இன்பத்தில் எல்லை இதுதானு?" என்று வியக்கத் தகுந்த நிலையில் உள்ளது. சிலர் தாயாகிய இறைவனிடம், அழுதும் பெற முயன்றனர்; தனக்குந் தாய்க்கும் இருக்கும் தொடர்பை நன்குணர்ந்த சிலர் அதிகாரஞ் செலுத்தியும் பெறமுயன்றனர். இனி நாம் சமயக் குரவர்களையும், பிற அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்ற அடியவர்களும் ஈசனைத் தாயாகக் கொண்டு, கண்டு, கேட்டவைகளை ஆய்ந்து இன்புறுவோம். முதற்கண் மணிவாசகரைக் காண்பாம்.

தாயொத்து நின்று முலைப்பாலன்ன ஞானப்பாலை அளிப்பானே! ஈசன். அவன் அதனைத் தாராதொழியின் நாயேனுகிய நான் சரிந்து மெலிந்திடுவேன். இனி எனக்கு அருள்புரிந்து நிற்பாயாக. என் அரும் பெருந் தாயே! நான் உன் திருப்பாதங்களை அடைந்தேன். ஆனுல் நீயோ என்னிடம் இல்லா தகன்றனையே. நாயேனுகிய அடியவனை உடனடியாக ஆண்டு அருள் புரிவதை நான்தான் வேண்டாதிருப்பனே!

தாயாய் முலையைத் தருவானே தாரா தொழிந்தாற் சவலை யாய்
நாயேன் கழிந்து போவேனே நம்பி யினித்தான் நல்குதியே
'தாயே' யென்றுன் தாளடைந்தேன் தயாநீ என்பா லில்லையே
நாயேன் அடிமை உடனாக ஆண்டாய் நான்தான் வேண்டாவோ

—மணிவாசகர்

இருபத்தியொன்றுலகங்கட்கும், அருள்பாலித்து நிற்கும் தாயே ! நாயேனை ஆண்டு பிறவிப் பிணிக்கு மருந்தாய் இருப்பவரே ! எப்பொழுதும் தாங்கள் நல்கும் சிவாநந்தப் பேரமுதை அனுபவிக்கத் தங்கள் திருப்பாதப் போதுகளையே, இரவும் பகலும் அணைந்து நிற்பது என்றோ ?

தாதாய் மூவே ழுலகுக்குந்
'தாயே' நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதாமணியே என்றென் றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே —மணிவாசகர்

கோத்தும்பி ! நாயேனாகிய என்னைத் தன்னுடைய அருள் கனிந்த திருத்தாள்களை நோக்கிப் பண் இசைக்கச் செய்த நாயகனும், பெரும் பேயனாகிய என் உள்ளத்தில் உள்ள பிழைகளைக் கொண்டருளும் தாயாய் நின்றருள் பாலிக்கும் ஈசற்கே சென்றூதாய்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
'தாயான' ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ !

சிவபெருமானே! குழந்தை பசியால் வாடி அழுமோ என்பதை முன்னதாக உணர்ந்து பாலை ஊட்டுவிக்கும் தாயை விடப் பரிந்து, நீ பாவியேனாகிய என்னுடைய சதைப் பொதியை உருக்கி, உள்ளொளியைப் பெருக்கி, ஆற்றொணா ஆனந்தக் கடலில் மூழ்கச் செய்த செல்வமே!

"பால் நினைந் தூட்டுந் 'தாயினும்' சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாயத்
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவ பெருமானே" —பிடித்தபத்து

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"
—சிவபுராணம்

நாயினுங் கடைப்பட்ட என்னையும், ஓர் பொருட்டாக எண்ணி மாயப் பிறப்பை வேரோடறுத்து, வல்வினையைப் பொடிபடச் செய்து ஆண்ட தாயிற் பெரிதுந் தயவுடைய எம்பெருமான், என்கிறார் வண்டமிழ் வாதவூரர்.

"நாயிற் கடைபட்ட நம்மையுமோர் பொருட்படுத்தித்
'தாயிற்' பெரிதும் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லிக் கொய்யாமோ"

"'தாயான' தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங் காண் அம்மானாய்"
—திருவம்மானை

மாணிக்கவாசகப் பெருமான் இதுவரை, இறைவனைத் தாயுருக் கொண்டு, அவர் பெருமையைக் கூறுவதைக் கண்டோம். இனி சொல்லில் வல்ல நாவரசர் பெருமான் கண்ட தாய் நிலையைக் கண்டு இன்புறுவோமாக.

" 'தாயுமாய்' எனக்கே தலை கண்ணுமாய்
பேயனேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனுரென நம் வினை நாசமே "

" 'தாயினும்' நல்ல சங்கரனுக் கன்பர் "

" 'தாயவன்' காண் உலகிற்குத் தன்னொப் பில்லாத்
தத்துவன் காண் "

" 'தாயவனை' யெவ்வுயிர்க்குந் தன்னொப் பில்லாத்
தகுதில்லை நடம் பயிலும் தலைவன் தன்னை "

நாவரசர் பெருமான் தாயாக இறைவனைக் கண்ட ஒரு சில இடங்கள் கண்டோம். இனித் தமிழிசை மிளிற்றும் நாவலூர்ப் புலவனிடம் சென்று, தாய்மையில் இறைவன் காட்சியளிக்கும் நிலையை அறிவோம்.

" 'தாயவளாய்'த் தந்தையாகிச், சாதல் பிறத்தலன்றிப்
போயகலாமைத்தன் பொன்னடிக் கென்னைப் பொருந்த
வைத்த"

—திருநாவலூர் தேவாரம்

" புல் நுனிப் பனிவெங் கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருளிலை நாளும்
என்னே னக்கினி இற்றைக்கு நாளை
யென்றிருந்திடருற்றனன் 'என்தாய்' "

—திருவிடைமருதூர் - தே - ரு

உண்ணீர் சிவம் விளங்க ஓங்குவிக்கும் கண்மணியாம் அருட்பா தந்த வள்ளல் இராமலிங்க அடிகள் இறைவனைத் தாயாகக் கொண்டு போற்றும் இடங்களைக் காண்பாம்.

" 'தாயே' மிகவும் தயவுடையாளெனச் சாற்றுவர் இச்
சேயேன் படுந்துயர் நீக்க என்னே உளஞ்செய்திலையே
நாயேன் பிழை இனி நடாது நல்லருள் நல்க
வருவாயே எம் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே'

" 'தாயாகித்' தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னை நிகரில்லாத தனித்தலைமைத் தெய்வம் "
—பரசிவநிலை

" தந்தையுந் 'தாயுங்' குருவும் யான் போற்றுஞ்
சாமியும் பூமியும் பொருளும் நீயே " —முறையீடு

" 'தாயு மென்னொருமை' தந்தையும், ஞான
சபையிலே தனி நடம் புரிந்த... " —முறையீடு

தாயுமானவர் சொன்னவை காண்க.

" 'தாயான' தண்ணருளை நிரம்ப வைத்துத்
தமியேனைப் புரவாமற் றள்ளித் தள்ளிப் " —கல்லாலின்

" 'தாயினும்' மினிய நின்னைச் சரணென வடைந்த நாயேன்
பேயினுங் கடையனுகிப் பிதற்றுதல் செய்தனன்றே "
—கற்புறுசிந்தை

" 'தாயினும் நல்ல தயாளுவே நின்னை யுன்னித்
தீயின்மெழு கொத்துருகுஞ் சிந்தைவரக் காண்பேனே!"
—கா. பே. கண்ணி

" தாயுந் தந்தையு மெனக்குற வாவதுஞ் சாற்றின்
ஆயுநீயு நின்னருளு நின்னடி யருமன்றே !
—ஆசையெனும்

இனி முடிவாகப் பட்டினத்தடிகளிடம் வருவோம். 'பூரணமே ! அன்னை, பிதா, உறவினர், சுற்றம் ஆகிய இவை யாவும் தேவரீராகவே யிருக்க இவற்றின் உண்மையைத் தேரேன் ' என்கிறுர் அடிகள்.

" 'தாயாகித்' தந்தையாய்த் தமக்கிளைஞர் சுற்றமெலாம்
நீயாகி நின்றநிலை யறியேன் பூரணமே !"

இதுவரை நாயன்மார்கள் நவின்ற, அடியார்கள், அறைந்த, அருமை வாய்ந்த தாய் ஈசனைக் கண்டோம்; ஆய்ந்தோம்; இன்புற்றேம். இப்பொழுது நாம் ஒரு தீர்ந்த

முடிவிற்கு வரவேண்டுமல்லவா ? உலகத்தில் வாழ் மக்கள் அனைவருக்கும் ஈசன் தாய் தன்மையில் நின்று இன்னருள் பாலித்து நிற்கிறான் என்பதே நாம் அறிந்த உண்மை. தாயே ஈசனாயின் நாம், அனைவரும் அவருடைய சேய்கள் தானே ! தாயைப் பற்றியே இதுவரை பேசிச் சென்ற யாம், சேய்களைப் பற்றி ஒன்றும் பேசாது விட்டேம். காரணம் இருக்கவேண்டுமல்லவா ? சேய்கள் மழலைச் சொற்களையே திரும்பத் திரும்பப் பேசினால் போதும் என்பதே. மழலைச் சொற்களில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா போன்ற அரிய நூல்களைப் படித்தால் - இனிய பண்ணமைந்த இசையோடு - தாயாகிய இறைவன் கண்டு வள்ளுவர் கூறிய வகையில் இன்புறுவார். வள்ளுவர் கூற்றுவது :—

குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச் சொற்கேளா தவர் —குறள்

தாய்க்கு எல்லா சேய்களிடமும் ஒத்த அன்புதானே நிலவும் ? அவள் தன் சேய்களை மாறுபட்டுச் செல்லினும் வேறுபிரித்துக் காணமாட்டாள் அல்லவா? ஈசனையொத்தத் தாய்மார்களை, சில தனயர்கள் நாயினும் கேடாய் நடத்துகிறார்களே ? அறிந்தோ அறியாமலோ தெரியவில்லை. இவர்களுக்கு உய்யுநெறி உண்டா ? கிட்டுமா ? சிந்தனை செய்மின் !

வெறுக்கவா, போற்றவா ?

(ம. ரா.)

சமயாசிரியர்களான அப்பர் சம்பந்தர் முதலியோர் அருளிச் செய்த அருட்பாடல்களை ஆராய்ந்தால் பௌத்தர்

சமணர் முதலியவர்கள் எத்தனை இழிவினர் ஆகக் கூறப்பட்டுள்ளார்கள் என்று அறிவோம். ஆனால் புத்தர் மகாவீரர் என்பவர்களுடைய வாலாறுகளைக் கவனித்தால் அத்தகைய இழிவான செயல்களை அவைகளில் காணுவதில்லை. சாதாரண மானிடனைவிட உயர்ந்த நிலைமையிலேயே அவர்கள் வாழ்ந்து இருந்தார்கள் என்றும், அவர்கள் நல்ல வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டுக்களாகவும் இருந்தார்கள் என்றும் எண்ணுவோம். அப்படியானால் ஏன் அவ்வாறு அச்சமயிகள் இழிவுபடுத்தப்பட்டார்கள் என்று ஆராய்ந்தோர்கள், ஆதியில் தூய்மையாகக் காணப்பட்ட அச்சமயங்களில் பின்னளில் கெடுதலான பழக்க வழக்கங்கள் புகுந்து அவைகள் சைவசமயாசிரியர்கள் காலத்தில் மிக இழிவாகிவிட்டபடியால் அவர்கள் இழிவாகப் பேசப்பட்டார்கள் என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட கேடுகளைக் காட்டி மக்களை மீட்டுத் தூய்மையான சைவக் கொள்கையில் மக்கள் விடப்பட்டார்கள். ஆனால் தற்காலத்தில் அவ்வாறு தூய்மையாக்கப்பட்ட சமயிகள் மீண்டும் விழுந்து கிடக்கும். இழிவு நிலையைக் கண்டால் சமயாசாரியர்கள் என்ன கூறுவார்களோ ?

உயிர்ப்பலி வேண்டாம் என்று கூறிய பௌத்த சமயத்தில் தோன்றிய சிங்களவர், சீனர் முதலியோர் பலவகை மது மாமிசங்களை உண்ணப் பார்க்கிறோம். உயிர்க்கு இன்னா செய்யக்கூடாது என்று சொன்ன மகாவீரர் கொள்கையைத் தழுவுகிற சமணர்கள் ஏழைமக்களிடம் கந்து வட்டி வாங்கித் துன்புறுத்திக் கேடுசெய்வதைக் கண்கூடாகக் காண்கிறோம். இது கிடக்க, சைவர்கள் எத்துணைபேர் கிராம தேவதைகளுக்குப் பூசை போட்டு உயிர்பலி தருகிறார்கள் ! " அர்ச்சனை தமிழ் பாட்டே " ஆகும் என்று கொண்ட சுந்தரர் கொள்கைகளைவிட்டுத் தற்கால அர்ச்சகர்கள் அறியாத மொழியில் பிதற்றிவா அதனை இக்காலத்தில் ஆதரிக்

கின்றனர். இவை தவிர வெறும் சடங்குகளுக்குச் சொல்ல வொண்ணு மதிப்புத் தரப்படுகிறதல்லவா ? இவைகள் எல்லாம் எதனைக் காட்டுகிறது? எந்தக் கேடுகளைச் சமயாசிரியர்கள் வெறுத்தார்களோ அவைகளே புல்லுருவிகளாகவும், காளான்களாகவும், களைகளாகவும் நமது சமயத்திலும் புகுந்துகொண்டன. ஆகவே நாம் இந்நாளிலும் அதே தப்புக்கள் செய்துவிட்டு அந்தப் பௌத்தர் சமணர்களை அதே தப்புக்களுக்காக வெறுத்தல் சரியாகுமா ? பழைய நிலைமை மாறிவிட்டது கண்டும், இன்னும் பழமையைப் பேசுவதில் பயனில்லை அல்லவா ? ஆகவே பிறரை வெறுப்பதை விட்டுவிட வேண்டும் அல்லவா ?

அண்மையிலே ஈழநாட்டில் தெற்குக் கோடியிலிருக்கும் கதிர்காமம் சென்றேன். அங்கே முருகப் பெருமானை வழிபட வந்தோர்களில் சைவர்களும் இருந்தனர். புத்தர்களும் இருந்தனர். முருகப்பெருமானையும் வள்ளியம்மையையும் பூசித்துத் தீர்த்தம் தந்தவன் கப்புராளன் என்ற சிங்கள பௌத்தன். இவனிடம் சைவர்களும் பௌத்தர்களும் பிரசாதம் வாங்கிக்கொண்டனர். விநாயகர் கோயிலிலும் தெய்வயானையார் கோயிலிலும் ஒரு வடநாட்டு அந்தணன் பூசை செய்த பிரசாதம் வாங்கிக்கொண்டனர். தமிழ்மக்கள் வெகு அன்போடு தொழுது பிரசாதம் பெற்றுக்கொண்டனர். ஒருவரை ஒருவர் வெறுக்கவில்லை. பௌத்தர்களை என் சைவர்கள் வெறுக்கவில்லை, மறுக்கவும் இல்லை ?

கொழும்புக்கு 6 கல் அளவில் உள்ள களனியா என்ற இடத்துப் புகழ்பெற்ற பௌத்தர் கோயிலுக்குச் சென்றேன். கோயிலுக்கு உள்ளே புத்தர் சிலைகளும் அழகிய ஓவியங்களும் இருந்தன. ஆனல் ஒரு மூலையில் திருமாலும் கந்தரும் வைக்கப்பட்டிருந்தனர். கோயில் உருவம் இந்து மதச் சிற்பம். கருவறையின் பின்னர் பரிவார தேவதைகள்

இருக்கின்றன. இவைகளில் விநாயகர், திருமால், கந்தர் முதலிய உருவங்கள் உள்ளன. இவைகளை ஏன் பௌத்தர்கள் வணங்குகிறார்கள்? இப்படியே கொழும்பில் உள்ள மற்ற பௌத்த ஆலயங்களில் திருமால் உருவங்களைப் பார்க்கலாம்.

கண்டியில் பல்லுக்கோயிலுக்குச் சென்றேன். அங்கே அடுத்த வளைவிற்குள் திருமால் ஆலயம் இருக்கிறது. இங்கே அர்ச்சகன் சொன்ன மந்திரங்களில் இந்து தேவதைகளின் பெயர்கள் வருகின்றன. திருமாலைப் பௌத்தர்கள் தொழுகின்றனர். துவேஷபுத்தி அவர்களிடம் இல்லை.

வெள்ளவத்தையில் கதிரேசன்கோயிலிலே பௌத்தச் சிங்களர் தேங்காய் பழம் தந்து அர்ச்சனை செய்கின்றனர். அவர்கள் குடும்பத்தோடும் வந்து பணிகின்றனர். ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது? இவை கண்டால் வெறுக்க மனம் வருகிறதா? போற்ற அல்லவோ தோன்றும்?

அநுராதபுரத்திலும் பொலன்னருவையிலும் பௌத்த சின்னங்களோடு சிவாலயங்களும் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றன அல்லவா? அவைகளைப் பௌத்தர் அழிக்கவில்லை. சமரச பாவனையில் இரண்டு சமயத்தார்கள் இருந்திருக்கின்றனர். இதனை ஆராய்ந்தால் மாச்சரியம் மிகுதியாக என்றைக்கும் இருந்திருக்காது என்று எண்ண வேண்டும்.

இப்படி யிருக்கையில் இச் செய்கைகளை நாம் வெறுக்க வேண்டுமா அல்லது போற்ற வேண்டுமா என்ற எண்ணம் தோன்றுகிறதில்லையா?

——

தமிழரசி கொலுவிருக்கை

ம. ரா.

கொலுவு

'தமிழரசி கொலுவிருக்கப் போகிருள். அச்சிறப்பும் ஈழ நாட்டிலாம். அதனைக் கண்டு களிக்கவேண்டும்' என்று தமிழ்நாடு முழுவதும் முழங்கியது ஒரு பேச்சு. அக்கொலுவு பார்க்கச் செல்வதற்குப் பல தடைகள் உள்ளனவாம். அவைகளை நீக்குவது எப்படியோ என்று ஏக்கத்துடன் பேசினுர்கள் சிலர். 'தடைகள் என்ன பிரமாதம். நான் முன் இருந்து அவைகளை நீக்கிவிட்டு அழைத்துச் செல்லுகிறேன்' என்று முன் வந்தார்கள் ஒருவர் இருவர். அவர்களை நம்பி ஏமாந்தவர்களும் உண்டு. தமக்குத் தாமே முயற்சி செய்து கொலுவைப் பார்த்து மகிழ்ந்தவர்களுக்கு உண்மைத் தடைகள் யாதொரு தீங்கும் செய்யவில்லை. கொலுவு காண சென்றவர்களில் பெரும்பான்மையோர் அந்தக் காட்சியோடு திருப்தி அடையாமல், இறைவன் திருக்கோயில்களையும் முருகன் புனிதத் தலங்களையும் கண்டு வரவேண்டும் என்று பயணம் செய்தார்கள். அதுமட்டுமா? இயற்கையன்னையின் அழகுகளைப் பருகவும் சிலபேர் சென்ருர்கள். இடை இடையே போதி நீழல் புனிதன் திருவுருவங்களையும் வழிபாடுகளையும் கண்டார்கள். ஆகவே, இது ஒரு புது முறைப் பயணம் அல்லவா. அப்படிச் சென்றவர்களும் தனித்தனியே செல்லாமல் தொகுதி தொகுதிகளாகச் சென்றதும் குறிக்கத் தக்கது. நவராத்திரிக் கொலுவிற்கும் பெண்பாலர் மட்டுமே செல்வது நமது நாட்டு வழக்கம். அவர்களிலும் சிறுமிகளே சிறப்பாக இருப்பார்கள். அழகிய பொம்மைகளும், இன்னிசை விருந்துகளும், சுண்டல் பணியாரங்களுமே அவர்களை இழுப்பவை. ஆனல் தமிழ் அன்னையின் கொலுவோ தொலைவான பல் நாடுகளிலிருந்தும் இருபாலாரையும் கவர்ந்தது. இயல், இசை, நாடகம் என்ற முக்காட்சிகளும் அவர்களைக் கவர்ந்து வசீகரித்தன. அன்னை அரசியின் உண்மை எழிலைப் பருகி அவட்குத் தம் காணிக்கைகளை வைத்து வணங்கவே ஆயிரக்கணக்கில் மக்கள் சென்ருர்கள். அப்பணிவும் வெகு ஒழுங்காகவும் மிக அமைதியுடனும் இருந்தது. கண்டு களித்தவர்கள்

அதனை விளக்கிக் கூறவும் ஆற்றல் இன்றித் தவித்தனர். அத்தனைச் சிறப்பில் அன்னையின் கொலுவிருக்கை திகழ்ந் திருந்தது.

காவணம்

ஈழ மண்டலத்துத் தனிப் பெரும் திருமகனார், சைவத் திற்கு அருந்தொண்டு செய்த பெருமகனார், சைவ நூல்களை மேல்நாடுகளுக்கு விளக்கின நன்மகனார், ஈழத்தில் அரும் கோயில்களை எழுப்பித் தந்த புனித மகனார், மக்கள் உரிமை களைப் பாதுகாத்த வீரமகனார், கல்வித்துறைக்கு உடல் பொருள் ஆவியும் தந்து அருளின தீர மகனார், சர். பொன் னம்பலம் இராமநாதனார் அவர்களின் இதய ஒளியாக விளங்குவது யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலிப் பரமேசு வரன் கல்லூரியாகும். அது விரிந்த நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. அதனிடையில் மிகப் பெரிய காவணம் எழுப்பப்பட்டது. கலைமகளின் அலங்காரங்கள் முழுவதும் அக்காவணம் பெற்றிருந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் அதன் உள்ளும் புறம்பும் இருந்தும் நின்றும், தமி ழன்னைக்கு வழிபாடு செய்ய, தக்கவசதிகள் அங்கு இருந்தன. கல்லூரி வளைவு முற்றிலும் தோரணங்கள், கொடிகள், பதாகைகள், விதானங்கள், நன்நெறி அட்டைகள், செம் மைப் புலவர் படங்கள், பெரியார்களின் திருவுருவங்கள், ஆசாரியர்களின் ஓவியங்கள், நிரம்பியிருந்தன. வருபவர் களுக்குச் சிற்றுண்டி பானங்கள், வாகனங்கள் தங்குமிடங் கள் முதலியன ஏற்படுத்தப்பட்டிருந்தன. நான்கு நாட் களும் யாழ்ப்பாணப் பகுதி ஒரே ஆரவாரமாக இருந்தது. அன்னையின் திருவிழா அன்றி வேறு பேச்சு எங்கும் நிகழ வில்லை.

அமைப்பு

தமிழ்விழா நடைபெற்ற காவணம் அம்பலவாணர் திருக்கூத்து புரிந்த பொது அம்பலத்தை ஒத்திருந்தது என்றும் எண்ணலாமோ? எதிரே இருந்தது உயர்ந்த அரங்கு மேடை. கீழே அமர்ந்தது பொதுமக்கள் உட்கார்ந்திருந்த மண்டபம். மேடையின் பேரில் உன்னத பீடத்தில் தமிழரசியின் சின்னமாகிய ஏட்டுப்

பிரதிக் கட்டு விளங்கிற்று. அது யானையின் பேரில் பவனி செய்விக்கப் பெற்றுக்கொண்டு வரப்பெற்ற பெருமை வாய்ந்தது. அதுவும் நாவலர் பெருமானுடைய திருக் கோயிலிலிருந்து கொண்டுவரப் பெற்றது. அதன் பீடத்து அடியில் தமிழ்ப் பெருமக்கள் அமர்ந்திருந்தார்கள். கீழே நிலதளத்தில் எண்ணற்ற மக்கள் ஆடவரும் பெண் மணிகளும் உட்கார்ந்திருந்தார்கள். இவர்களிலே எந்தப் பாலர் மிகுதியானவர்கள் என்று கூற இயலாது. இந்தப் பெருமையில் திருவோலக்கம் ஓங்கியிருந்தது. தேவாரத் திருப்பொலிவுடன் திருவிழா தொடங்கிற்று. தேவாரம் இன்றி தமிழன்னை சோபை உறுவாளா? இவ்வாறு தொடங்கிய விழா இறுதிவரை ஒப்பற்ற செழிப்புடன் விளங்கிற்று.

ஆசிரியர் சேவை

தமிழன்னையை அலங்கரித்து அவளைக் கொலுவில் அமர்த்தி அவளுக்கு உகந்த வழிபாடு செய்யத்தக்கவர்கள் அவளையே என்றைக்கும் போற்றி அவள் அருளும் அமுதை உண்டு மகிழ்ந்து வாழ்வார்கள் அன்றோ? அத்தன்மையர் யார்? அவர்களே ஆசிரியர்கள் அன்றோ? ஆசிரியர்களிலும் தமிழாசிரியர்களே அன்றோ? ஆகவே அன்னவர்களே தமிழன்னையின் திருவிழாவைத் தொடங்கி நடத்த உரிமை பெற்றவர்கள். அவ்வுரிமை பெற்றவர்களே ஈழநாட்டில் வடப் பகுதியின் தலைநகரில் செம்மையுடன் யாவருமதைப் புகழ நடத்திவைத்து வெற்றி அடைந்தார்கள். அதுவரை நடந்த மூன்று விழாக்களும் சென்னை நாட்டிலே நடந்தன. முதல் விழா பாண்டியநாட்டு மதுரையிலும் இரண்டாம் விழா சோழநாட்டுத் திருவாரூரிலும் மூன்றும் விழா கொங்கு நாட்டுக் கோவையிலும் நடந்தன. அங்கே நடத்தியவர்கள் பெரும்பாலும் நிலக் கிழார்களும், தொழிற் செல்வர்களும், வழக்கறிஞர்களுமே ஆவார்கள். தமிழாசிரியர்கள் வந்திருக்க லாம். ஆனால் அவர்களுடைய பொறுப்பு அங்கே காண வில்லை. தென் தமிழ் நாட்டுத் தமிழாசிரியர்களுக்கு அவ் வுரிமை இல்லையா, ஒத்த ஊக்கம் இல்லையா, தக்க உவப்பு இல்லையா? தமிழன்னைக்கு அவர்களே முதன்மைப் புலவர் களாக இருந்தும் ஏன் அவர்கள் முன் நின்று பொறுப்பை

ஏற்றுக் கொள்ளவில்லை? தமிழன்பு அவர்களுக்கு இல்லை என்பது உண்மை அல்ல.

அக்கேள்விக்குத் தக்கவிடை ஈழ நாட்டில் கண்டோம். அங்கே தமிழ்த்திருவிழாவிலே ஒவ்வொரு பகுதியிலும் ஆசிரியர்களே தலைப்பட்டு ஊக்கத்துடன் வேலைசெய்தார்கள். வரவேற்புத் தலைவர், செயலாளர், அங்கத்தினர் எல்லாரும் ஆசிரியர்களே. பொது ஆசிரியர்களும் அல்ல. செந்தமிழ் வல்ல ஆசிரியர்களே. அம்முறையில் அத்திருவிழா வெற்றியுடன் திகழ்ந்தது. கல்வியமைச்சரே முன்னின்று உழைத்தால், ஏன் ஆசிரியர்கள் முன்வரமாட்டார்கள்? அது மட்டும் அல்ல. அடிப்படையான மற்றொரு காரணமும் உண்டு. ஈழநாட்டில் ஆசிரியர்களுக்கு மதிப்பு மிகுதி. தென்தமிழ் நாட்டில் இல்லை ஈழநாட்டில் ஆசிரியர்களை சிறந்த அறிவாளிகளாக மதிக்கிறார்கள். நமது நாட்டிலோ அவர்களை ஏட்டுச் சுரைகளாகப் பாவித்துக் கதைகளையும் புதிர்களையும் கட்டி ஏளனம் செய்கிறார்கள். அதற்குக் காரணம் செல்வாக்கு இல்லாமையே. அச் செல்வாக்கும் செல்வத்தினால் தோன்றுகிறதல்லவா? நமது நாட்டில் ஆசிரியருக்குத் திங்கள் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் வருவாய். ஆனால், அங்கே 150 தருகிறார்கள். தலைமை யாசிரியருக்கு இங்கே 75 கொடுத்தால் அங்கே 250 கொடுக்கிறார்கள். நடுத்தர, உயர்தரப் பள்ளிகளிலும் அவ்வாறே மூன்று மடங்கு அதிக வருவாய் உண்டு. அப்படியாயின் செல்வாக்கு மிகுதியாகாதா? மற்றொரு சிறந்த காரணமும் உண்டு. அரசியல் பள்ளிகளில் மட்டும் அல்ல, சொந்தப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் அரசியலாரிடம் ஊதியம் பெறுகிறார்கள். 'வயிற்றுக்குச் சிறிது ஈயப்படின், செவிக்கு உணவு' ஏன் கிடைக்காது? ஆகவே, அந்நிலையில் இருக்கும் ஆசிரியர்கள் தமிழன்னைத் திருவிழாவில் ஊக்கத்துடன் உழைக்கமாட்டார்களா? அவ்வுழைப்பே தான் யாழ்ப்பாணவிழாவில் காட்சி தந்தது.

தாயும் சேயும்

தாய்க்கும் சேய்க்கும் உள்ள அன்பின் பெருக்கம் வேறு எந்த உறவுக்கும் இல்லையல்லவா? தாயும் சேயும் ஒருகால் பிரிந்து வாழ்க்கை நடத்துவது இயல்பு. மீண்டும்

திருவிழாக்களில் தான் சந்திப்பார்கள். அப்போது ஏற்படும் அன்புக்கு அளவில்லை. தமிழ்நாடு தாய்நாடு ஆகும். ஈழநாடு சேய்நாடு ஆகும். தமிழன்னையின் சேய் ஈழமாகிய புக்ககத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள். இந்த ஆண்டு திருவிழா நடந்ததில் தாயும் சேயும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதில் ஏற்பட்ட அன்பின் பெருக்கத்தைக் கூறமுடியுமோ? அதில் தோன்றிய உவப்பிற்கு மதிப்பு உண்டோ? இந்த உவப்பில் எழுந்த காட்சிகள் சொல்லோவியங்களாகத் திகழ்ந்தன. அவைகளைத் தீட்டவும் எவரால் முடியும்? ஓவியத்தால் எழுத ஒண்ணு உருவங்களைக்கொண்டு அவைகள் திகழ்ந்தன.

விளையாடல்

அந்தத் திருவிழாவில் தாய்நாட்டுச் சேய்களும், சேய்நாட்டுச் சேய்களும் சேர்ந்து காவணத்தில் விளையாடின. அச்சேய்கள் செங்கீரை யாடினதும், சப்பாணி கொட்டினதும், ஊஞ்சலாடி மகிழ்ந்ததும், சிறு பறை அடித்ததும், முத்தமிட்டுக் கொஞ்சினதும், சிறுதேர் உருட்டினதும், சிற்றில் இழைத்து சிறு சோறு ஆக்கினதும், பிணங்கிச் சிறுகாலால் உதைத்ததுவும், முதலான பிள்ளை விளையாடல்களைக் கண்டு களிக்காதார் எவரே ?

இவ்வாறு கொஞ்சிக் குலாவி விளையாடுதலில், சேய்நாட்டு மக்கள் மழலைகளை பொழிவது இயற்கை. ஆனால் இந்த ஆண்டுத் திருவிழாவிலோ, தாய்நாட்டுச் சேய்களே மழலைகளைப் பொழிந்து மக்களை மகிழ்வித்தார்கள். சில சேய்கள் எழுதிப் படித்ததிலும் மழலைகளைப் போல உச்சரித்தார்கள். சிலர் வீட்டுக்குள் கொஞ்சுவது போலப் பேசினார்கள். தமது கொச்சைப் பேச்சுக்களைப் பிறநாட்டார் கேட்டு நகையாடுவார்களே என்றும்கூட எண்ணாமல் கொஞ்சினார்கள். சேய்கள் பேச்சில் பொருள் சுவை வேண்டியதில்லையல்லவா? அதுபோலவே பொருள் இன்றிச் சொல் அடுக்கைகளை மட்டும் எறிந்தனர்கள் சில சேய்கள். இந்த முறையில் தாய்நாட்டுச் சேய்கள் தங்கள் ஆர்வத்தைக் காட்டினார்கள். ஆனால், சேய்நாட்டார்களோ அக்கறையுடனும் அன்புடனும் தம் கருத்துக்களை வெளியிட்டார்கள். மழலையும் குதலையும் அன்பிற்கடங்கி இறுதி

யில் வெற்றியில் திகழ்ந்தன. ஆகவே பிழைகளும் குறைகளும் மகிழ்வில் மறைந்தன.

நிகழ்ச்சிகள்

முன்னரே வெளிவந்த நிகழ்ச்சி நிரலில் கண்டபடியே எல்லாம் நடந்தன. ஒன்றிரண்டு பேச்சாளர்கள் வாராதிருந்தும் அவர்கள் பேச்சை மற்றவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டில் குறையின்றி நடந்தன. வெளியில் இருந்துவந்தவர்களுக்கு முதல் நாள் உணவு எதிர்பாராத விரைவில் முட்டுப்பட்டுப் பின்னர் ஒழுங்கு அடைந்தது. உணவு வேறுபாடுகள் மாறுபடினும் பின்னர் ஒத்துக்கொள்ளல் இயல்பே. இடியாப்பமும், சொதியும் கண்டறியாத மக்களுக்கு வேறுபாடு தோன்றுவது இயல்பே. இரண்டாம் நாள் அவையும் இயல்பே ஆகிவிட்டன. அதுவரை அடித்த வெப்பக்காற்று சில துளிகள் விழவே தணிந்து தென்றல் ஆகிவிட்டது. சேய்நாட்டு மக்கள் காட்டிய உள்ளத்து அன்பும் நயம்படும் பேச்சும் தாய் நாட்டினரை வசியம் செய்துவிட்டன. காதுக்கு இன்னிசையும், கண்ணுக்குப் பாவை கூத்தும், அளித்த வகையில் மற்றெல்லாப் பொறிகளும் இன்பத்தில் திளைத்தன.

முதல் நாள் காலையில் தலைமை உரைகள் முற்றும் நிகழ்ந்தன. பிற்பகலில் சென்னைத் தமிழ்ப் பேராசிரியர் தலைமையில் மொழிப்பகுதி நடைபெற வேண்டியிருந்தது. காவணத்தில் மக்கள் நிறைந்திருந்தார்கள். தொடக்கப் பேச்சை ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். ஆனால் பேராசிரியரின் திருவுருவம் பேரவையில் காணவில்லை. செயலாளர்கள் திகைத்தார்கள். நேரம் ஆனவுடன் முதல் பேச்சாளர் தோன்றினார், தன் பேச்சைத் தொடங்கினார். அது அழகாகவும் சுவையாகவும் இருந்தது. இடையில் பேராசிரியர் மேடைக்கு வந்து அமர்ந்தார். முகமும் அகத்தை வெளிப்படுத்தியது. சமாளித்துக்கொண்டு அமர்ந்தார். முதல் பேச்சு முடிந்ததும், பேராசிரியர் எழுந்து பேசினார். "ஒரு உண்மை இன்று கண்டேன். தமிழ்மொழி எதற்கும் காத்திராது என்பதே. அதிலும் யாழ்ப்பாணத்துத் தமிழ் ஒரு கணமும் காத்திராது, மக்கள் வரவை எதிர்பார்த்துக்

காலம் கழிக்காது, தன் கடமையைச் செய்துகொண்டே ஓங்கி வளரும்'' என்று ஒப்புக் கூறி நடவடிக்கைகளை நடத்தினர். இவ்வாறு தமிழன்னையின் கொலுவு தடைகள் நீங்கி வெற்றியுடன் நடந்தேறியது.

சைவப் பணி

அம்மன் கொலு எவ்வாறு சைவத்தை வளர்த்தியது என்று கேட்பீர்களோ? அதையும் கூறிவிடுகிறேன். அம்மன் கொலுவு பார்க்கச் சென்றவர்கள் எல்லாரும் அப்பன் கொலுவையும் பார்க்கவே வந்தவர்கள்தான். ஈழநாட்டில் இரண்டு பாடல்பெற்ற தலங்களும், ஆறு முருகப்பெருமான் தளிகளும், உண்டு. அவைகளைக் கண்டு வணங்கி அவன் அருளுக்குப் பாத்திரமாகித் திரும்பவே, நினைத்துச் சென்றிருந்தார்கள். திருக்கோணமலை, திருக்கேதிச்சரம், என்பன சைவசமயாச்சாரியர்களால் பாடப்பெற்றவை. நல்லூர்க் கந்தர்மாவிட்டபுரக் கந்தர் முதலியவைகள் முருகன் தலங்கள். எல்லாவற்றிலும் சிறப்பாகக் கதிர்காமம் என்பது மக்களை இழுத்த ஒரு புனிதத்தலம். ஆகவே இத்தலங்களைப் பார்க்க எல்லாரும் விழைந்தார்கள். சென்றும் கண்டார்கள். செயலாளர்கள் இந்தப்பயணங்களுக்கு ஏற்ற உதவி புரிந்தார்கள். ஈழநாட்டுச் சிறப்புக்களைத் தெளிவாக விளக்கும் கட்டுரை நூல் ஒன்றை வெளியிட்டார்கள். விழாமலர் ஆக வந்த அந்நூல் சிறந்த முறையில் எழுதப்பட்டு அழகிய படங்களைக் கொண்டு இருந்தது. அதனை விழாவிற்குச் சென்றவர்கள் மட்டும் அன்று, தமிழ்நாட்டு மக்கள் எல்லாரும் படித்துப் பாராட்டித் தத்தம் நூலகத்தில் வைத்துச் சேமித்துப் பாதுகாக்கும் சிறப்புகொண்டது. இத்தனைச் சிறப்புக்களுடன் கூடிய தமிழ் விழாக் கொலுவைக் காணச் சென்றது ஒரு பெருமையல்லவா?

நின்ற இருந்த கிடந்த நிலைகள்

"நின்றான், இருந்தான், கிடந்தான்'' என்ற மூவினை நிலைகளும் திருமால் திருவுருவங்களுக்கு உள்ள வேறுபாடுகள் என்று பொதுவாக நாம் உணர்ந்துள்ளோம்.

திருமால் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளுக்கு நாம் செல்லும்போது இம் மூன்று நிலைகளைக் கொண்ட திருமேனிகளை காண்பது உண்டு. திருவேங்கடம், காஞ்சி, முதலிய திருப்பதிகளில் நின்ற திருவுருவமே அருள் புரிகின்றது. சோளிங்க புரத்துக் கடிகாசலத்தில் வீற்றிருந்து அருள் செய்கின்ற திரு வுருவம் காணப்படுகின்றது. திருவரங்கத்தை அலங்கரிப்பதோ கிடந்த திருவுருவம் ஆகும். ஆகவே இம் மூன்று திருவுருவநிலைகளும் திருமாலுக்குச் சிறப்பாக உள்ள திருவுருவங்கள் என்று அறிகிறோம்.

இனி, மற்ற திருமூர்த்திகளுக்கு இவ்விதமான மூன்று நிலைகள் உண்டா என்ற கேள்வி எழும்பக்கூடும். அதைப் பற்றிச் சிந்திக்கையில் சிவபெருமானுக்கு அமைந்துள்ள திருவுருவங்களில் இம் மூன்று நிலைகளும் இருப்பதாகத் தெரியவில்லை. சிவபெருமான் திருக்கோயில்களில் மூலஸ்தானங்களில் அரு உருவ திருமேனியே இருக்கும். ஆனால் உற்சவர்களிலோ சுற்றிலுமுள்ள மூர்த்தங்களிலோ நின்ற திருமேனியையும் இருந்த திருமேனியையும் காணலாம். பிக்ஷாடனர், சந்திரசேகரர் திருவுருவங்களில் நின்ற திருமேனியும் சோமஸ்கந்தர், சுகாசனர், இவைகளில் இருந்த திருமேனியும் காணலாம். ஆனால் கிடந்த அல்லது படுத்த திருமேனி எங்கும் காணப்படுவதில்லை. சிவபெருமான் • பிறவாயாக்கைப் பெரியோன், ஆகையால் கிடந்த திருமேனி எப்படி ஏற்படும் ?

இனிச் சிவகுமாரர்களின் திருவுருவங்களிலும் அதே நிலைமை காணலாம். சிவபெருமானுக்கு உள்ள நிலைகள் தான் சிவ குமாரர்களுக்கும் இருக்கும அல்லவா ? முருகக் கடவுள் பழனியிலும், மருதமலையிலும் நின்றுகொண்டிருக்கிறார். எட்டுக்குடியில் மயில்மீது வீற்றிருக்கின்றார். ஆனால் எங்குமே அவருக்குக் கிடந்த திருமேனி இல்லை. அதுபோல மூத்தப் பிள்ளையாருக்கும் உண்டு. எல்லா பிள்ளையார் கோயில்களிலும் அவர் வீற்றிருக்கும் திருமேனி நிலேயே அருளுகிறார். ஆனால் நடன விநாயகர் திருவுருவத்தில் அவர் நின்றுகொண்டு நர்த்தனம் புரிகின்றார்.

கிடந்த திருமேனி அவருக்கு இல்லை. அம்மன் திருவுருவங் களிலும் இதே நிலையைத்தான் காண்கிறோம்.

புறசமயங்களில் ஒன்றான ஆருகசமயத்தில் அருகக் கடவுள் பெரும் பாலும் நின்றே காட்சியளிக்கிறார். பௌத்தசமயத்திலோ அப்படியன்று. அதில் நின்றும் இருந்தும் கிடந்தும் காட்சியளிக்கும் நிலைகளைக் காண்கி றோம். புத்தர் திருமால் அவதாரம் என்று கூறப்படுகிற படியால், அப்புத்தர் இம்மூன்று நிலைகளையும் கொண் டிருக்கிறார் போலும். தனித்தனியே இவ்வுருவங்கள் அமைந்திராமல் இம்மூன்றும் ஒரு இடத்தில் அமைக்கப் பட்டிருத்தல் காணலாம். ஒரு மண்டபத்தில் மட்டும் அன்று, ஒரே பாறையிலும் இம்மூன்று உருவங்களும் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

புத்தருடைய திரு உருவங்கள் மிகுதியாக இலங்கை யில் உண்டு. அனுராதபுரம், பொலன்னருவை, கொழும்பு, கலனியா, கண்டி, முதலிய இடங்களில் இத்திரு வுருவங் கள் சிறப்பாக உண்டு. அவைகளில் இம்மூன்று நிலைகளும் கொண்ட உருவங்கள் இருக்கின்றன. ஓவியங்களில் மட் டுமே யன்றி செங்கல் காரையினால் கட்டப் பட்ட உருவங் களும் இருக்கின்றன. இவைகள் மிக ஒளிபெற்ற வர்ணங் களால் தீட்டப் பெற்றிருக்கின்றன. எல்லாவற்றைக் காட்டி லும் கருங்கல் பாறைகளில் சித்தரிக்கப் பட்ட திருவுருவங் களே மேன்மையானவை. அவைகள் பொலன்னருவையில் காணலாம். அந்நகரத்தில் கல்விகார் என்ற இடத்தில் ஒரு பெரிய இயற்கைப் பாறையை வெகு அருமையாகச் செதுக்கி அதிலே இம்மூன்று நிலைகளைக் கொண்ட திருவுருவங்களை யும் ஆக்கியிருக்கின்றார்கள். மிகப் பிரசித்தி பெற்ற இலங்கை அரசன் பராக்கிரம பாகு என்ற பேரரசன் ஆணையின்படி இத்திருவுருவங்கள் செதுக்கப்பட்டனவாம். 25 அடி உயர மும் 100 அடி நீளமும் கொண்ட ஒரு பாறையின் ஒரு புறத்தில் நின்றான் இருந்தான் கிடந்தான் என்ற முன்நிலை களையும் அமைக்கப்பட்ட உருவங்களையும் காணலாம்.

வேலைப்பாடோ மிகச் சிறந்தது. இவைகளைப் போன்ற கல் வுருவங்கள் பிற இடங்களில் காணுதல் அரிது.

இம்மூன்று திருவுருவங்களிலும் உட் கருத்து என்ன? கௌதமபுத்தர் வீற்றிருந்த நிலை அவர் போதிமரத்து நிழலில் அமர்ந்து ஞான அருள்பெற்ற நிலை ஆகும். நின்றநிலை அவர் சாந்த மூர்த்தியாகி பிக்ஷை என்ற தொழில் ஏற்று இருந்தது நின்றநிலையாகும். இனிக்கிடந்த நிலையோ அவரது இறுதி நாளில் சாந்தியைப் பெற்று நிர்வாணநிலை அடைந்தது ஆகும். ஆக இம்மூன்று நிலைகளும் அவருடைய தவ வாழ்க்கையில் பெற்ற நிலைகள். இந்நிலைகளைத்தான் பௌத்த ஆலயங்களில் காண்கிறோம்.

ஆனால் திருமாலின் உருவங்களில் கண்ட கருத்து வேறு அல்லவா. நின்றநிலை அன்பர்களுக்கு அருள்செய்து அபயம் அளிக்கும். இருந்த நிலை சுகாசனத்தில் வீற்றிருந்து அனுக்கிரகம் செய்யும். கிடந்தநிலை அறிதுயில் கொள்ளும். ஆகவே, இந்த நிலைகள் தரும் குறிப்புக்கள் வேறாகத் தோன்றுகின்றன. புத்தர் திருமால் இவ்விருவர்களும் தோற்றுவிக்கும் மூவகை நிலைகளின் கருத்துக்களையும் ஒன்றாக எண்ணமுடியுமா என்பது ஆராய்ச்சிக் குரியதொரு கேள்வி. அதனை ஆராய்ச்சியாளருக்கே விட்டுவிடுவோம்.

திருமூலர் மந்திரமும் - மெய்கண்டார் சிவஞான போதமும்*

துடிசை கிழார்

சரித்திரப் புகழ்பெற்ற சேம்பி நாட்டுத் தலைநகராகிய இராமநாதபுரத்தில் கூடியிருக்கும் சிவநெறிப் பெருங்கழக 45-வது ஆண்டு விழாவில் தலைமை வகிக்கும் தலைவர் அவர்கட்கும், மற்றுமுள்ள சகோதர - சகோதரிகட்கும், ஏனையபெருமக்கட்கும் என்னுடைய வணக்கம் உரித்தாகுக.

* சென்னை சிவநெறிப் பெருங்கழகத்து (சைவ சித்தாந்த மகா சமாஜம்) 45-வது ஆண்டு விழாவில் இராமநாதபுரத்தில் 3.0 12 - 50 சனிக்கிழமை படிக்கப்பட்டது.

இவ்வாண்டு விழாவில் 'திருமந்திரமும் - சிவஞான போதமும்' என்னும் பொருள் பற்றிப் பேச எனக்கு சமயம் அளித்த பெருங்கழக அமைச்சர் - செயலாளர் முதலிய எல்லோருக்கும் என் வணக்கம் உரித்தாகுக.

சென்ற 42 ஆண்டுகளாக இக்கழக விழாக்களில் இப் பொருள் பற்றிப் பல அறிஞர்கள் பல இடங்களில் பேசக் கேட்டிருப்பீர்கள். ஆனால் அதைப்பற்றித் திரும்பவும் பேசுவானேன் என்றால்,

"ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே"
"முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்"

என்ற சூத்திரங்களின்படி ஒரு பொருளைப்பற்றிப் பல தடவை பேசுவதனாலும், கேட்பதனாலும் குற்றம் குறைகிறது, தெளிவு உண்டாகிறது, முறையாகப் பேசும் வன்மை உண்டாகிறது என்று ஏற்படுகிறது.

மேலும், நாம் படிக்கும்போது கால்பங்கும், நம்மோடு ஒத்தவர்களுடன் விவகரிக்கும்போது இன்னொரு காற்பங்கும், அவையில் பிறருக்கு எடுத்துச் சொல்லும் போது ஏனைய அரைப்பங்கும் நிரம்பிப் புலமை நிறைவு உறுகிறது என்பது அநுபவம்.

ஆதலின், ஒருபொருள் பற்றிப் பல தடவைகளில் பேசவேண்டும், கேட்கவேண்டும், கேட்டவற்றைச் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் உண்மை வெளிப்படும்.

இனி எனக்குக் கொடுக்கப்பட்ட பொருள்கள் 'திருமூலர்-திருமந்திரம் - மெய்கண்டார்-சிவஞானபோதம்' என்பன. இந்நூற்களைப் பேசுமுன், அந்நூற்களை இயற்றிய ஆசிரியன்மார்களைப்பற்றித் தெரிந்துகொண்டு மேற்செல்லுவாம்.

திருமூலர்

தென்பாண்டி நாட்டில் பரம்பரைச் சைவ வேளாளர் குலத்தில் பிறந்து, பெற்றோர்களால் சுந்தரம் என்ற அருமைத் திருநாமம் சூட்டப்பெற்று, வளர்ந்து, ஐந்து வயது நிறைந்ததும் 'தென் தமிழ்நாட்டகன் பொதியில்

திருமுனிவன் தமிழ்ச் சங்கத்தில்' சேர்ந்து, உலகநூல்களை எல்லாம் ஓதி, அவைகளில் முதன்மையாகத் தேர்ந்து, குறுமுனிவன் அகத்தியருடைய நட்பைப் பெற்று, அவருடைய கருணையினால் அறிவு நூல்களைக் கற்க வடகயிலைக் குருகுலத்தில் சேர்ந்தார். அக்குரு குலத்தில் அவருடன் படித்தவர்கள் சனகர் - சனந்தனர் - சனாதனர் - சனற்குமாரர் - சிவயோகமாமுனி - மன்று தொழுத பதஞ்சலி-வியாக்கிரமர் ஆக எழுவர். அங்கு அவர்கள் படித்துத் தேர்ந்ததும் குருகுலம் முடிவு அடைந்தது. சுந்தரநாதர் - பதஞ்சலி - வியாக்கிரமர் மூவரும் இறைவனுடைய ஆனந்த நடனம் காண்பான் தில்லை வந்து நடனக் காட்சியைக் கண்டார்கள். பின், பதஞ்சலி, வியாக்கிரமர் தில்லையிலேயே தங்கி விட்டார்கள். சுந்தரநாதர் மட்டும் மறுபடியும் கயிலைசென்று 3000 ஆண்டு யோகத்தில் அமர்ந்தார். அது காரணமாக நந்தியெம்பெருமான் திருவருள் பெற்றார், நாதனும் பேர் பெற்றார், நான்மறை யோகிகளில் ஒருவரானார், அணிமாதி சித்திபெற்று அவைகளில் வல்லவரானார். அப்படி இருக்கும்போது, பொதியமலைக் குறுமுனிபால் தமக்கு இளமையில் ஏற்பட்ட கேண்மையினால் அவருடன் சிலநாள் உறைவதற்கு எண்ணிக் கயிலையினின்றும் புறப்பட்டார். வழிநெடுக பசுபதி - நேபாளம் - காசி முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு ஆவடுதுறை வந்து, ஒப்பிலா முலைநாயகி பங்கர் மாசிலாமணி ஈசரை வணங்கினார். வணங்கும்போது,

> " அங்கிலைமைத் தானத்தை அகலாத ஒருகருத்து
> முன்னியெழுங் குறிப்பினால் மூளும்ஆ தரவெய்த "

அத்திருவருட் குறிப்பை உணர்ந்தார். உணர்ந்தும் பொதியமலை செல்லும் விருப்பால் ஆவடுதுறையை விட்டகன்று ஏகினார். இறைவன் அவரைத் தடுத்து ஆட்கொண்டு, அவர் மூலமாக வேதாகம சாரத்தை வெளிப்படுத்த எண்ணி, ஒரு திருவிளையாடல் புரிந்தார். சுந்தரநாதர் ஆவடுதுறையை விட்டுப் பொன்னி நதிக்கரைக்குப் போனபோது, எதிர்க்கரையில் கோக்குலங்கள் புலம்புவன கண்டார். அதன் காரணத்தை அறிய அவர் அங்குச்

சென்றபோது, சாத்தனூரைச் சேர்ந்த ஆமேய்ப்பார் குடித் தோன்றலான மூலன் என்னும் இடையன், வினைமாள, நிலத்திடை வீழ்ந்து இறந்து கிடந்தான். அக் கோக்குலங் களின் துயரை நீக்கக் கருதி, தம்முடலை அப்புறவில் ஒரு மரப்பொந்தில் சேமித்து வைத்துவிட்டு, மூலனுடைய பவனவழியாகத் தம்முயிரைப் பாய்த்தினர். பாய்த்தினதும் திருமூலராக எழுந்தார். கோக்குலங்கள் துயர் நீங்கி மேயச் சென்றன. பின்நடந்த சரித்திரம் பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. கண்டுகொள்க. அன்றுமுதல் சுந்தர நாதர் திருமூலர் என்று அழைக்கப்பட்டார்.

இனி மெய்கண்டார் சரித்திரத்தையும் சுருக்கமாகக் கூறுவாம்.

நடுநாட்டில் திருவெண்ணெய்நல்லூரில் புகழ்பெற்று விளங்கிய சடையப்ப முதலியார் மகளார் மங்களாம்பிகைக் கும், திருப்பெண்ணாகடத்து களப்பாளகோத்திரத்து அச்சு தன் என்பாருக்கும், வேயனதோள் உமைபங்கன் வெண் காட்டு நாதர் அருளால் வேண்காட்டுப் பெருமாள் அவதரித் தார். கலியாணம் ஆகிப் பல ஆண்டுகள் பிள்ளைப்பேறின் மையால் அச்சுதன் களப்பாளர் தம் குலகுருவாகிய துறை யூர் சதாசிவ சிவாசாரியாரிடம் சென்று தம் குறையைத் தெரிவிக்க அவர் தேவாரத்தில் கயறு சாத்திப் பார்க்க,

"பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநிலை
வாயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டாம்"

என்ற தேவாரம் உதயம் ஆயிற்று. குரு மிக மகிழ்ந்து, திருவருளை வியந்து அச்சுதன் களப்பாளரை மனைவியா ருடன் திருவெண்காட்டுக்குச் சென்று இறைவனை வணங்க ஆசிர்வதித்து அனுப்பினர். அச்சுதன் களப்பாளரும் அவர் மனைவியும் அப்படியே செய்ய அவதரித்தவர் வெண் காட்டுப் பெருமாள். வெண்காட்டு நாதருடைய அருளால் பிறந்தவர் ஆனபடியால் அவருக்கு வேண்காட்டுப் பெருமாள் என்ற நாமத்தைச் சூட்டினார்கள்.

வெண்காட்டுப் பெருமாள் இரண்டு வயது நிரம்பும் தருணத்தில் திருவெண்ணெய்நல்லூருக்குத் தன் தாய

மாமன் காங்கேய பூபதி வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது சடையப்ப முதலியார் உயிரோடு இல்லை. வெண்காட்டுப் பெருமாள் முன்னைவினையின் பக்குவத்தால் எப்போதும் திருவருட்டுறைக்குச் சென்று, பொல்லாப் பிள்ளையார் ஆலயத்துக்குமுன் மண்டபத்தில் உட்கார்ந்து திருவடித் தியானத்தில் வீற்றிருப்பார்.

ஒருநாள் சனற்குமார முனிவருடைய ஞானபரம்பரையில் வந்த பரஞ்சோதி முனிவர் திருவெண்ணெய் நல்லூருக்கு வந்து, மங்களாம்பிகை பங்கர் தடுத்தாட் கொண்டநாதரை வணங்கி, வலம் வரும்போது, பொல்லாப் பிள்ளையார் ஆலயத்தில் வெண்காட்டுப் பெருமாளைச் சந்தித்தார். வெண்காட்டுப் பெருமாள் முன்னை வினைப்பயனால் நல்லுணர்வெய்தி, இரும்பைக்காந்தம் இழுக்கின்றவாறு ஓடோடியும் சென்று, முனிவரை வணங்கி, ஆட்கொள்ளும் படி வேண்ட, பரஞ்சோதியார் பையனுடைய பக்குவம் நோக்கி, ஞானதீக்கை புரிந்து, தம்முடைய குருவின் பெயரான மெய்கண்டார் என்னும் பெயரையே தீக்கை நாமமாகச் சூட்டி, இறை - உயிர் - மலம் என்ற முப்பொருள்களின் உண்மையையும், அவைகளின் தன்மைகளையும், புகட்டி, சிவஞானபோதச் செம்பொருள்களான 39 சூர்ணிகைகள் அடங்கிய சுவடியையும் கொடுத்து, அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறை - கணிக்கும் முறை உபதேசித்து, நிட்டை கூடும் முறையையும் காட்டி, பிறருக்கு உபதேசம் செய்ய ஆணையும் தந்து, பின் பொதியை நோக்கிச் சென்றார். அன்றுமுதல் வெண்காட்டுப்பெருமாள் மெய்கண்டார் ஆனார்.

பின் மெய்கண்டார் திருவெண்ணெய் நல்லூரிலேயே தங்கி, பல மாணவர்களுக்குத் தாம் கேட்ட சிவஞான போதச் செம்பொருள்களைப் போதித்து வந்தார். இது தெரிந்து சதாசிவ சிவாசாரியார் துறையூரிலிருந்து திருவெண்ணெய்நல்லூருக்கு வந்தார்.

எல்லோரும் எதிர்கொண்டழைத்து உபசாரம் செய்தார்கள். மெய்கண்டார் குடும்பத்தார் அனைவரும் சென்று சதாசிவ சிவாசாரியரை வணங்கினார்கள். மெய்கண்டார்

மாத்திரம் போகவில்லை. இப்படியிருக்க ஒருநாள் சதாசிவ சிவாசாரியரே மெய்கண்டார் பாடம் போதிக்கும் திருவருட்டுறைப் பொல்லாப் பிள்ளையார் கோயிலின் முன் மண்டபத்துக்குப் போக, அப்போது மெய்கண்டார் ஆணவமலத்தைப் பற்றிப் போதித்துக்கொண்டிருந்தார். குலகுருவைப் பார்த்தும் மெய்கண்டார் பாராததுபோல பாடம் கற்பிப்பதிலேயே இருந்தார். சதாசிவ சிவாசாரியார் சிறிது முனிவுற்று, மெய்கண்டார் எதிரே சென்று, "ஆணவமலத்தின் தன்மை கூற வல்லனையோ? ஆணவமலத்தின் சொரூபம் என்னை?" என்றார். மெய்கண்டார் நிமிர்ந்து பார்த்து, இன்முகத்தோடு அவரைச்சுட்டிக் காட்டி அவர் நிற்கும் நிலையே ஆணவமலத்தின் சொரூபம் என உணர்த்தினர். சதாசிவ சிவாசாரியார் உலக நூல் - அறிவு நூல்களைக் கற்றவர் ஆனபடியால், மெய்கண்டாருடைய பார்வை பட்டதும் உண்மையுணர்ந்து, அவருடைய பாதங்களில் வீழ்ந்து, ஆட்கொள்ளும்படி வேண்ட, மெய்கண்டார் அவருக்கு ஞான தீக்கையைச் செய்து 'அருள்நந்தி' எனத் தீக்கை நாமத்தையும் சூட்டினர். அன்று முதல் சதாசிவ சிவாசாரியார் அருணந்தி சிவாசாரியார் எனப்பட்டார்.

அருணந்தி சிவாசாரியார் 49 மாணவர்களுள் முதல்வரானர்.

இப்படிச் சிவஞானபோதப் பாடம் நடந்து வரும் போது, பரஞ்சோதி முனிவர் கொடுத்த 39 சூர்ணிகைகளையும் வைத்துக்கொண்டு, வேறு பல சுவடிகளையும் தேட, சுவாமிநாததேசிகர் என்ற பெரியார் எழுதிவைத்திருந்த 39 சூர்ணிகைகள் அடங்கிய சுவடி ஒன்று மெய்கண்டாருக்குக் கிடைத்தது. அதனைச் சிலர் பொல்லாப் பிள்ளையார் உணர்த்தியதாகவுங் கூறுவர்.

இவ்விரண்டு சுவடிகளையும் வைத்துக்கொண்டு, ஏது, திருட்டாந்தங்களையும் கூட்டி, மெய்கண்டார் சிவஞான போதம் என்ற நூலைச் செய்தார். அது 12-சூத்திரங்களும்-40 அடிகளும்-சொற்கள் 216-ம் 82 வெண்பாக்களும் கருத்துரையும்கொண்ட ஒரு நூல்.

திருமந்திரமும் சிவஞானபோதமும் ஒரே மரத்தில் இருவேறு கிளைகளில் பழுத்த இரண்டு கனிகளுக்கு ஒப்பாகும்.

(A) ஞானபரம்பரை

சதாசிவ நாயனார்
|
அனந்த தேவர்
|
ஸ்ரீகண்ட பரமசிவம்
|
நந்தியெம்பெருமான்
|
சனகர் | சனந்தனர் | சனாதனர் | சனற்குமாரர் | சிவயோக மாமுனி | பதஞ்சலி

வியாக்கிரமர் | சுந்தரநாதர் எ. மூலர் (திருமந்திர நூல் ஆசிரியர்)
|
சத்தியஞான தரிசனிகள் I
எ.
மெய்கண்டார் I
|
பரஞ்சோதி முனிவர்
|
மெய்கண்டார் II
(சிவஞானபோத நூல் ஆசிரியர்)

(B) காலம்

திருமந்திரம்	சிவஞானபோதம்
கி. மு. 3100 — 100 B. C. மூவாயிரம் ஆண்டுகளில், ஆண்டுக்கொரு பாட்டாகப் பாடப்பட்டது.	கி. பி. 13-ம் நூற்றாண்டில், அதாவது கி. பி. 1228 - ல் பாடப்பட்டது.

(தொடரும்)

சிந்தாந்த ஆசிரியர் திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து மூன்று நாட்களிலும் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

பூவாளூர் ஸ்ரீ குங்குமாம்பிகா சமேத திருமூல நாத சுவாமி பிரம்மோற்சவத்தில் மே 16, 18 நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

தென்காசி திருவள்ளுவர் கழகம் 24-ம் ஆண்டு நிறைவு திருக்குறள் விழாவை 21, 22, 23-5-51 நாட்களில் கொண்டாடிற்று.

தூத்துக்குடி திலகவதியார் மாதர் கழகத்தின் ஆறுவது ஆண்டு நிறைவு விழா 10-6-1951-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர், 'சித்தாந்த கலாநிதி' திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்தது.

காரைக்குடி திருவாசக மடத்தில் 8-7-51 ஞாயிற்றுக் கிழமை காலை, மாலை இருவேளைகளிலும் திருவாசக விழா தமிழ் அறிஞர் ராய. சொக்கலிங்கன் தலைமையில் நடைபெறும். குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் தொடங்கிவைப்பவர்கள். பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் அவர்கள் பேசுவார்கள்.

சேக்கிழார் விழா

சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூரில் சேக்கிழார் திருப்பணிக் கழகத்தின் பத்தாம் ஆண்டுவிழா 7, 8-6-51-ல் வித்துவான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தூத்துக்குடி, கீழூர், சேக்கிழார் கழக ஏழாவது ஆண்டு நிறைவு விழா 9-6-1951 அன்று தூத்துக்குடி "சித்தாந்த பேராசிரியர்' திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் தலைமையில் நடந்தது.

தேவகோட்டை சேக்கிழார் கழகம் 6, 7, 8-6-51 நாட்களில் சென்னை பன்மொழிப்புலவர், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் சேக்கிழார் திருநாளைக் கொண்டாடிற்று.

——

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street. Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C.-M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.